119

ௐ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-கச] யுவ—ஐப்பசி [பரல்-௫

திருஞானசம்பந்த அடிகள் தேவாரம்.

திருச்சிறுகுடி, திருமுக்கால்.

செற்றினில் மலிபுனற்சிறு குடிமேவிய
பெற்றிகொள் பிறைமுடி யீரே-
பெற்றிகொள் பிறைமுடி யீருமைப் பேணிநஞ்
சற்றவ ரருவினை யிலரே.

பதவுரை :—

செற்றினில் புனல்மலி சிறுகுடி மேவிய—வயல்களில் நீர் நிறைந்திருக்கிற திருச்சிறுகுடி என்னும் திருப்பதியில் திருக் கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்ற

பெற்றிகொள் பிறை முடியீரே—நல்லதன்மை யுடைய இளம் பிறைத் திங்களைத் திருமுடியில் அணிந்துள்ளவராகிய உம்மை

பேணி நஞ்சு அற்றவர்—அன்பு செய்து தொழுதலினால் தமது நெஞ்சில் வஞ்சனைப்பண்பு இல்லாத மக்கள்

அருவினை இலர்—வெல்லுதற்கரிய வினைத்தொடக்கு இல்லாதவர் ஆவர்.

விளக்க உரை :—

செற்றினில் புனல்மலி சிறுகுடி மேவிய—செறு + இன் + இல் = செற்றினில். செறு = வயல்; இன் = சாரியை; இல் = இடப் பொருளுணர்த்தும் ஏழாம் வேற்றுமை உருபு. செறு—செற்று என இரட்டித்தது. புனல் மலி சிறு குடி என்றதனால் திருச் சிறு குடியின் நீர்வளம் கூறப்பட்டது.

பெற்றிகொள் பிறை முடியீர்—பெற்றி = தன்மை; நல்லதன்மை இரவில் திங்கள் உலகிருளை நீக்குதலால் பெற்றிகொள் பிறை

என்றார். பெற்றிகொள் பிறை முடியீர் என்றதனால் இறைவன் தன்னை அடைந்தவரைக் காத்தருள்வன் என்பது குறிப்பிடப்பட்டது.

உமைப் பேணி நஞ்சு அற்றவர்—பேணுதல்=விரும்புதல்; அன்பு செய்தல்; அதாவது அன்பு செய்து தொழுதல். பேணி நஞ்சு அற்றவர் என்பது பேணுதலால் நஞ்சு அற்றவர் எனக் காரணப் பொருளில் வந்தது. காரணப் பொருளில் வந்த பேண என்ற வினையெச்சம் பேணி எனத் திரிந்தது. நஞ்சு என்பது இங்கே உருவகமாய் வஞ்சனை என்ற பொருளில் வந்தது. நஞ்சானது தன்னை உண்டவரை அழித்தல் போல நெஞ்சில் வஞ்சனையானது அந்நெஞ்சினை உடையவரை அழித்தலால், நஞ்சு வஞ்சனை என்னும் பொருள்படவந்தது. நஞ்சற்றவர்—நெஞ்சில் வஞ்சனை யில்லாதவர். ஒருவர் இறைவனை உண்மை அன்புடன் தொழும்பொழுது அவருடைய அறிவு வேட்கை செயல்கள் முறையே இறைவனுடைய அறிவு வேட்கை செயல்களுக்குள் அடங்கி நிற்கின்றன. ஆதலின் இந்த அறிவு வேட்கை செயல்களைச் செய்கின்ற அவர் நெஞ்சம் நேர்மையாயிருக்குமே யன்றி வஞ்சகமுடையதாய் இருக்க முடியாது. ஆதலின் பேணி நஞ்சற்றவர் என்றார். "பஞ்ச பூதவலையிற் படுவதற்-கஞ்சி நானுமாமாத்தூ ரழகனை-நெஞ்சினு ளினைந்தேனினை வெய்தலும்—வஞ்சவாறுகள் வற்றின காண்மினே" என்று திருநாவுக்கரசு அடிகள் திரு ஆமாத்தூர்—திருக் குறுந்தொகைத் தேவாரம் 4 வது பாட்டில் இவ்வுண்மையைக் கூறி யிருத்தல் காண்க. பொய் பொருந்தும் வஞ்சனைக் கருத்துக்கள் மலிந்து நிலவுகின்ற இக்கால உலக மக்கள் தாங்கள்படுந் துயரினின்று நீங்குதற்கு இறைவனை உண்மையன்போடு தொழுதலே தீர்வு மருந்தாகும் என அறிக.

அருவினை இலர்-அருவினை-இறைவனைத் தொழுதல் அல்லாத வேறு வழியில் வெல்லமுடியாத வினைத்தொடக்கு. வினை என்பது இங்கே முன்செய்த வினைத்தொடர்புகளினு லுண்டாகும் துன்பங்கள்; ஆகுபெயர். இலர்—இல்லாதவர்; குறிப்பு வினையாலணையும் பெயர். ஏ—அசை.

திருவாசகம்

கோயிற்றிருப்பதிகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்

தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்க ளியாவையுங் கடந்த
இன்பமே யென்னுடை அன்பே.

பதவுரை:—

தேறலின்தெளிவே—மிகத் தூய தேன் போன்று உயிர்களுக்கு இனிமையானவனே

சிவபெருமானே—சிவபெருமானே

திருப்பெருந்துறை யுறை சிவனே—திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் சிவனே

ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த இன்பமே—முடிவில்லாத் தத்துவ நிலைகள் எல்லாவற்றிற்கும் அப்பாலா யிருக்கும் பேரின்பப் பொருளே

என்னுடை அன்பே—என்னை (அடிமையாக உடைய) அன்புக்குரிய பொருளே

மாறிநின்று—மெய்யாகிய நிலையான சிவப்பொருளை நோக்கி நிற்றலுக்கு மாறுபட்டுப் பொய்யாகிய நிலையில்லாத உலக நுகர்வுப் பொருளை நான் நோக்கி நிற்கும்படி

என்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழி அடைத்து—என்னை மயக்குகின்ற வஞ்சகமான ஐம்பொறிவாயில்களில் நான் செல்லுதலைத் தடுத்து

என் உள் அமுதமே வந்து ஊறிநின்று—எனது உள்ளத்தினுள்ளே அமுதம்போன்ற முழுப்பேரின்ப உணர்வானது விளங்கி ஊற்றிலிருந்து நீரெழுதல் போல எப்பொழுதும் எழும்படி

எழு பரஞ்சோதி உள்ளவா காண அருள்வாய்—தோன்றுதற்குக் காரணமான அருட் பேரொளியை இயல்பான முறைமையில் நான் அகக்கண்ணால் அறியும்படி அருள் செய்வாய்.

விளக்க உரை :—

தேறலின் தெளிவு—தேறல்=தேன்; தேறலின் தெளிவு—குற்றமில்லாத தூய தேன்.

ஈறிலாப்பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே—மண்முதல் நாதம் இறுதியாகிய முப்பத்தாறு தத்துவங்களில் வைத்து அறியப் படுவனவாயுள்ள எண்ணில்லாத தத்துவ நிலைகளையுங் கடந்து நிற்கின்ற இறைவனது இன்ப வடிவான சிறப்பியல்பு நிலையில் (சொரூப நிலையில்) உயிர்களால் இறவாத பேரின்பம் நுகரப்

படுதலின் அடிகள் 'ஈறிலாப் பதங்களி யாவையுங் கடந்த இன்பமே' என்றார். பதம்—நிலை; உலகில் உயிர்கள் நுகரும் இன்பமும் இன்பவடிவான இறைவன் தத்துவங்களைக் கலந்து நிற்றலாலுண்டாகிறது.

ஈறிலா என்ற அடைமொழியை இன்பத்துடன் சேர்த்து ஈறிலா இன்பம் என்பதற்கு இறவாத பேரின்பம் என்று பொருள் கொள்ளினும் பொருந்தும்.

என்னுடை அன்பே—இத்தகைய பேரின்பத்தை உயிர்கள் நுகர்தற்கு அன்பு காரணமாயிருத்தலின் இன்பமே என்று அடிகள் சிவபெருமானை விளித்தபின் அன்பே என்று கூறினார். "அன்பே சிவமாவது ஆரும் அறிகிலர்" என்று திருமூலர் திருமந்திரம் 270வது பாட்டிற் கூறினமை காண்க.

மாறி நின்று-நிற்க என்பது நின்று எனத்திரிந்து நின்றது. நிற்கஎன்பது காரியப் பொருட்டாய் எதிர்காலம் குறித்து நிற்கிற செய்யென் வாய்பாட்டு வினையெச்சம்.

வஞ்சப்புலன்—ஐம்பொறிகளால் நுகரப்படும் உலக இன்பம் உண்மையில் நிலையில்லாததாயும் துன்பந் தருவதாயு மிருப்பினும் ஐம்பொறிகள் அவ்வுண்மையை மறைத்து நிலையான இன்பம் போலத் தோன்றச் செய்தலின் அவற்றை வஞ்சப்புலன்என்றார்.

என்உள் அமுதே வந்து ஊறி நின்று—உள்=உள்ளம். நெஞ்சு-மனது. வந்து என்ற சொல்லை அமுதம்என்ற சொல்லின் பின்சேர்க்க. சென்றடையாத பரஞ்சோதி யாதலின் வந்து என்பதற்கு விளங்கி என்ற பொருள் கூறப்பட்டது. நிற்க, என்பது நின்று என, மாறி நின்று என்பதிற்போலத் திரிந்து நின்றது.

நின்று=நிலைபெற்று நிற்க, அதாவது, எப்பொழுதும் நிலையாக எழும்படி; ஊறிநின்றுஎன்பது உருவகம். "ஓர் ஊற்றி விருந்து நீரானது எப்பொழுதும் மேலேவந்து கொண்டிருத்தல் போல எனது உள்ளத்திலிருந்து பேரின்ப உணர்வு எப்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்க" என்ற பொருள்படும். அமுதே என்ற சொல்லிலுள்ள "ஏ" தேற்றத்தைக் குறிக்கிறது. இத்தேற்ற ஏகாரம் மலத்தொடக்குச் சிறிது மில்லாத முழுப்பேரின்பம் (பரிபூரணானந்தம்) என்றபொருளைத் தருகின்றது.

எழுபரஞ்சோதி உள்ளவா காண அருளாய்—எழுபரஞ் சோதி என்பது தோன்றுதற்குக் காரணமான பரஞ்சோதி. பரஞ்சோதி-மேலான ஒளி; பேரொளி; அருட்பேரொளி; முப்பத்தாறு தத்துவங்களையும் தன்னிடம் சத்தித் தொகுதியாய் அடக்கிக்கொண்டிருக்கிற இந்த அருட்பே ரொளியை அகக்கண்ணாற் காணுகிற ஒருவரே முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த நிலையிலுள்ள பேரின்பத்தை உணரவல்லவர் ஆதலின் பரஞ்சோதி உள்ளவா காண அருளாய் என்றார். காணுதல் என்பது இங்கே அகக் கண்

123

ணல் (ஞானக்கண்ணல்) அறிதல்; உள்ளவாறு என்பது உள்ளவா எனக் குறுகிநின்றது. உள்ளவாறு என்பது இயல்பானமுறைமையில் என்று பொருள்படும். உயிர்கள் மலத்தைச் சார்ந்து நிற்றல் செயற்கையும், அருளைச்சார்ந்து நிற்றல் இயற்கையுமாதலின் உள்ளவாறு என்பதற்கு இயல்பான முறைமையில் என்று பொருள் கூறப்பட்டது. மலமுற்றிலும் நீங்கிய ஒருவனுக்கு அருட்பேரொளி மலமறைப்பினின்றுநீங்கிய காரணத்தால் உள்ளவாறு காணப்படும். மாணிக்கவாசக அடிகள் இந்தப்பாட்டில், 'இன்றெனக்கருளி', என்னும், முதற் குறிப்புப்பாட்டில் இருள் கடிந்துள்ளத் தெழுகின்ற ஞாயிறே போன்று நின்ற நின்தன்மை என்று முதலாவதாகக் கூறப்பட்ட அருட்பேரொளியானது அந்தப்பாட்டில் மூன்றுவதாகக் கூறப்பட்ட பேரின்பம் அடைவதற்கு காரணமாயுள்ளது என்று கூறியருளினர். உலகப் பற்றை முற்றிலும் விட்டு முப்பத்தாறு தத்துவங்களுக்கும் அப்பாலுள்ள சிவத்தையே சிந்தித்துக் கொண்டிருக்கிறவருடைய உள்ளத்தில் அந்த அருட்பேரொளி விளங்கும் என்ற உண்மையையும் இப்பாட்டிற் கூறியருளினர்.

மா. வே. நெல்லையப்பபிள்ளை

கொலை மறுத்தல்

நலிதரு சிறிய தெய்வமென் றையோ
நாட்டிலே பலபெயர் நாட்டிப்
பலிதரு ஆடு பன்றிகுக் குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்
போலிவுறக் கோண்டே போகவுங் கண்டே
புந்திநோந் துளநடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வவெங் கோயில்
கண்டகா லத்திலும் பயந்தேன்.

—இராமலிங்க வள்ளலார்,

இலக்கணமும் இலக்கியமும்
LANGUAGE AND LITERATURE

அகப்பொருள் அழகு

[வித்துவான். மணி. திருஞானசம்பந்த முதலியார் அவர்கள்]

மன்னுலகில் எல்லாப் பொருள்களினுஞ் சாலச் சிறந்த செம்பொருள் மாண்புறு மனமேயாகும். நன்மனத்தால் நன்மை விளையவும், வன்மனத்தால் தீமை விளையவும் கண் கூடாகக் காண்கின்றோம். ஆதலால், நல்ல உள்ளம் வாய்த்தல் பொருவில்லாக் கழிபெருஞ் செல்வம் என்பதில் தினைத் துணையும் ஐயமின்று. வளமுறு கல்வியும், அளவிடற்கரிய அறிவும் பெற்ற பேரறிஞர்களும் நல்லுள்ளம் பெறவில்லை யெனின், அவர்கள் நன்மனம் பெற்றுள்ள ஒரு சாதாரண மனிதனினும் புல்லியர்களாகக் கருதப்படுவார்கள். அத் தகைய விழுமிய மனத்தை யுடைய மக்கள் பிறர்க்கு எல்லாத் துறைகளிலும் இன்பம் ஊட்டுவதன்றித் தாங்களும் இணை யிலா இன்பத்தில் எஞ்ஞான்றும் திளைத்துப் பொலிவுறுவார் கள். மனத்தில் உண்டாகின்ற எண்ணங்களுக்கு ஏற்ப ஒருவன் நல்லவனாகவோ, தீயவனாகவோ, பெரியோனாகவோ, சிறியோனாகவோ மாறுகின்றான்.

ஒருவருடைய உள்ளத்தின் உயர்ச்சியை அறிதல் அருமை யினும் அருமையாகும். அத்தகைய நுண்ணிய மாண் பொருளை அறிய வல்லுநர் பேரறிஞர்களாக இருத்தல் வேண் டும். உலகில் இரு நண்பர் ஒருவர்பால் ஒருவர் தம் மனத் திற் கொண்டுள்ள சிறிய எண்ணங்களை அறிவாராயின் அஞ் ஞான்று அவர்கள் எய்தும் இன்பத்தின் எல்லையை உணர ஒருவராலும் இயலாது. இரு சகோதரர் மனப்பான்மையும் அப்பெற்றியே என்னலாம். ஏனைய சுற்றத்தார் உள்ளுணர்ச்சி யும் அந்நீர்மைத்தேயாகும்.

உலகில் எல்லா இன்பங்களினுஞ் சிறந்த இன்பம் காதற் பழுத்த காரிகையை அண்மி, அவளிடம் எய்தும் இன்பமே என்பதில் ஐயமின்று. அங்ஙனம் கூறுவதால் கேவலம் ஒரு வரை ஒருவர் மருவுதலால் உண்டாகும் இன்பந்தான் என்று எண்ணுதல் பெரும் பேதைமையாகும். அரசனாக இருப் பினும், ஒப்புயர்வில்லாக் கல்விமானாக இருப்பினும், விழுத்தகு சிறப்பும், செல்வமும், அதிகாரமும் பெற்ற ஏனைய மக்களாக

இருப்பினும், பாவையர்பால் சிந்தையைச் செலுத்தாமல்
இரார் என்பது திண்ணம். மங்கையர் கூட்டுறவில்லா
வாழ்க்கை பதருக்குச் சமானமாகும் என்று சொல்லவும்
வேண்டுமோ? அக்காரணம் பற்றியே உலகில் மக்கள்மாத்திர
மன்றி விலங்குகளும், பறவைகளும், சிறு பிராணிகளுங்
கூட, ஆணும் பெண்ணுமாகக் கூட்டுறவு புரிந்து, இனிது
உயிர் வாழ்கின்றன.

இத்துணைப் பெருஞ்சிறப்பு வாய்ந்த கலப்பு வாழ்க்கை
தான் உலகில் இணையில்லாப் பேரின்ப வாழ்க்கையாகும்.
மேலுலகு உண்டு என்பார்க்கும், ஆன்மலாபம் உண்டு என்
பார்க்கும், என்றும் அழியாத நிலைபெற்று, எல்லா உணர்ச்சி
களும்பெற்று, முழுஅறிவோடு நின்று நிலவி, மறு பிறப்பு
எடுக்காமல் இருக்கும் வாழ்க்கைதான் பேரின்ப வாழ்க்கை
யென்று தோன்றும். இறந்த பின்னர் எய்தும் பேரின்ப
வாழ்க்கைக்கு வழிகாட்டியாகப் பொலிந் தொளிரும்
வாழ்க்கை சிற்றின்ப வாழ்க்கையே என்று அறிஞர்கள் கருது
கின்றனர். அத்தகைய வாழ்க்கையைப் பெற்றாலும், செம்மை
யுற, இன்பம் சீரிய நிலையில் பெறவில்லையெனின், அது மெய்
யின்ப வாழ்க்கையாகாது. ஆதலால், ஒரு ஆடவன் ஒரு மகளை
மிக விழைந்து, தன் மனப்பான்மைக்கு ஏற்பக் களவு மணம்
புரிந்து, பின்னர் இல்லற வாழ்க்கையை இனிது வாழ்
தலையே அறநெறி வழுவாத ஒப்புயர்வற்ற இன்ப வாழ்க்கை
யாக நமது நாட்டில் இருந்த பண்டைக்காலத்துத் தமிழ்
மக்கள் கருதியிருந்தார்கள். அவர்கள் திருமணம் புரிந்த
தன்மையையும், தங்கள் காதற் கிழத்திகளோடு உரிமை
பூண்டு இன்புறு வாழ்வை வாழ்ந்த தன்மையையும் உள்ளும்
போது ஒவ்வொரு அறிஞர் உள்ளத்திலும் உவகை வெள்ளம்
துளும்பும். அத்தகைய இணையில்லாச் சீரிய இன்ப வாழ்க்
கையைப் பிற்காலத்தில் நம் தமிழ்மக்கள் அறவே மறந்து
போயினர். இதுபோழ்து மணமகனும், மணமகளும் எய்து
கின்ற வாழ்க்கை மிகப் புல்லியதே என்பதில் சிறிதும்
ஐயமின்று.

பெருந்திருவும், பெருங்கல்வியும், பெருநிலையும் பெற்
றுள்ள மக்களும் தற்காலத்தில் விழுமிய காதற்சுவை விஞ்சிய
இன்பவெள்ளம் பெருகும் மணவாழ்க்கையை எய்துகின்றார்
களில்லை என்பது தவறாகாது. அத்தகைய பெரிய நிலையி
லுள்ளவர்களும் தங்கள் மனப்பான்மைக்கும், கொழுஞ்சுவைக்
கும் ஏற்பக் காரிகைகளை மணக்கின்றார்களில்லை. பெண்மணி
களின் கதியும் அப்பெற்றித்தே. அவர்களும் எத்துணைச் செல்

வமும், அதிகாரமும், கல்வியும் பெற்றவர்களாகத் திகழ்ந்த போதிலும், தங்கள் உண்மை விருப்பம்போல் இன்புறு இல்லற வாழ்வை எய்துகின்றார்களில்லை. இத்தகைய புல்லிய வாழ்க்கையை அறவே வெறுத்த பண்டைக்காலத்துத் தமிழ்மக்கள் தங்கள் சிந்தைகளிப்பச் சீரிய நிலையில் மங்கையர்களைக் காதற்சுவை நுகர்ந்த பின்னரே மணந்தார்களாதலால், அகப்பொருள் என்று ஒரு செம்பொருளும் உண்டாயிற்று. அகத்தே நிகழ்கின்ற எண்ணங்கள் எண்ணிறந்தனவாக இருத்தலால், அவற்றை அறிகின்ற ஆற்றல் ஆடவர்க்கும், மகளிர்க்கும் உண்டாயின் எத்துணைய இன்பம் இருபாலார்க்கும் உண்டாகும் என்று உரைக்கவும் வேண்டுமோ? ஒருவன் அல்லது ஒருத்தி மனத்தே நிகழும் இன்பத்தை அறிவது எவராலும் இயலாத காரியமாகும். அவ்வின்பத்தை அவனே அல்லது அவளே அறியவல்லார்களாவார்கள். அத்தகைய இன்பத்தின் பயனாக இருபாலார்க்கும் உண்டாகும் எண்ணங்கள் பற்பலவாக இருத்தலால் அவற்றையெல்லாம் பற்பல துறைகளில் பற்பல விழுமிய பொருள்கள் பொருந்தப் பண்டைக்காலத்துப் பெரும்புலவர்கள் அகப்பொருள் சம்பந்தமாகப் பற்பல நூல்கள் எழுதினார்கள். அக்காலத்தில் ஒருவன் எத்துணைய விழுமிய கல்விமானாகத் துலங்கியபோதிலும், அவன் அகப்பொருள் விஷயத்தில் பாண்டித்தியம் எய்தவில்லையெனின், அவன் சிறந்த வித்துவானாகக் கருதப்படமாட்டான். அக்காரணம் பற்றியே அக்காலத்தில் பெரும்புலவர்கள்கூடத் தங்கள் பேராற்றலையும், பெரும்புலமையையும் அகப் பொருள் சம்பந்தமாகப் பல சிறந்த பாக்கள் யாத்து விளக்கினார்கள். பத்தி நெறியில் சென்ற புலவர் பெருந்தகைகளுங்கூட இறைவனைத் தொழுகின்ற காலத்திலும், தங்களைத் தலைமகளாகப் பாவித்து, அப்பெருமானைத் தலைமகனாகப்பாவித்து எத்தனையோ பத்திச்சுவை சொட்டும் இனிய பாக்கள் பாடியிருக்கின்றனர். எனவே, அகப்பொருள் என்பது எல்லோராலும் பெரிதும் பாராட்டப்பட்டு வந்தது என்பது வெளிப்படை.

ஒழுக்கநெறி போதிக்கும் பேராற்றல் வாய்ந்த பேராசிரியராகிய தெய்வப்புலவர் திருவள்ளுவ நாயனாரும் அகப் பொருள் என்னும் அளப்பருஞ் சுவைவிஞ்சிய நுண்பொருளைக் கைவிட்டாரில்லை. அப்பெருந்தகையாரும் தாம் இயற்றிய இணையில்லாத் திருக்குறளில் 'காமத்துப்பால்' என்று ஒரு பகுதி இறுதியில் இயற்றித் தலைசிறந்த மனப்பான்மை

கெழுமிய காதலன், காதலியைச் சிந்தையில் அமர்த்தித் தமது விழுமிய ஒப்புயர்வில்லாப் பெருந்தன்மையையும், பெருங்குணத்தையும், பேரறிவையும், சிறந்த தவசிரேட்டரும் தங்கள் சென்னியில் அணியுமாறு அதன்கண் அருட் செய்திருக்கின்றனர். அவ்வரிய நுண்ணிய இன்பம் பொதிந்த பொருள்களை அறியவல்லுனர் எய்தும் இன்பத்தை அளவிட்டுச்சொல்ல இயலாது. அவ்வினிய பகுதியைத் திருப்பித் திருப்பி ஓதிச் சிந்தித்துச்சிந்தித்துப் பார்க்க வல்லார்க்கே அதன்கண் அமைந்துள்ள செம்பொருட் புதையல்கள் விளங்கும். அப்புலவரேறு அருட்செய்துள்ள பாக்களின் நுண்மையையும், அழகினையும், நயத்தையும் அறிகின்ற சாதாரண ஆடவரும், மகளிருங்கூட இன்பக்கடலில் திளைப்பார்கள் என்பது திண்ணம்.

தெய்வப் புலவர் திருவள்ளுவர் இசைத்த பாக்களில் சிற்சிலவற்றை ஈண்டு எடுத்துக் காட்டல் அத்தியாவசியமாகத்தோன்றலால், அவையிற்றைச் சிற்சில குறிப்புக்களுடன் விளக்குகின்றேன். அகப்பொருள் துறை என்பது சுருக்கிச் சொல்லுமிடத்துப் பேரழகு வாய்ந்த, வளமும், ஒளியுஞ் செறிந்த தலைமகனும், அவனைப் போன்றே எழிலும், ஒளியும், சுவையும் கெழுமிய தலைவியும் ஒரு சோலையினிடத்தோ, ஒரு மலையினிடத்தோ, ஒரு கடற்கரையினிடத்தோ இன்னும் இன்பம் நிறைந்த வேறு எந்த இடத்தோ ஒருவரை ஒருவர் கண்ட துணையானே காதற்கனியை நுகர்ந்து, ஒருவருக்கு ஒருவர் அடிமையாகிப் பொற்புள்ள சீரிய நிலையில் சிற்றின்பம் நுகர்ந்து, இருவர் உயிர்களும் ஓர் உயிராய்த் துலங்கிப் பின்னர் மனையறவாழ்க்கையில் இன்பத் தேன் தலைசிறக்க எய்துவதோடு, மாண்பயனும் எய்துதல் என்பதாகும். அங்ஙனம் ஒரு காதலனும், காதலியும் முதற்கண் சந்திப்பதிலிருந்து மனையற வாழ்க்கையை மாண்புடன் செலுத்துவது வரையில் பற்பல துறைகளில் பற்பல அழகுகளும் நயங்களும் மிளிர நம் பெருநாவலரும் அகப்பொருள் சம்பந்தமாகப் பொன்னினும், மணியினும் போற்றத் தக்க அரும்பொருள்கள் அருட்செய்தனர்.

திருவள்ளுவ நாயனர் இயற்றிய அரும்பாக்களில் ஒன்ருகிய "இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு, நோய்நோக்கொன் றந்நோய் மருந்து." என்னும் பாவினில் அமைந்துள்ள அழகினையும், நயத்தினையும் ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். காதலன் தான் நனி விழைந்த காதலியைக் குறித்து, "இவளுடைய மையுண்ட கண்களில் உண்டாகின்ற

நோக்கு மற்றைக் காலத்தில் ஒரே ஒரு நோக்கே. ஆனல், இவள் இப்போது என்னிடத்து இரண்டு பார்வைகள் செலுத்தினள். இக்கட்டழகியின் ஒரு பார்வை நான் என்றும் எய்தாத காம நோயை உண்டுபண்ணிற்று. அந்நோயை எய்திய நான் எங்ஙனம் அதனின்றும் மீள்வேன் என்று நான் தவிக்க வேண்டிய அவசியமின்று. ஏனெனில், இவள் அளப்பருங் கருணையால் என்னிடம் செலுத்துகின்ற வேருெரு பார்வையே அக்காம நோயை நீக்கிப் பேரின்பத்தை அளிக்க வல்லதாக உளது. இஃது எத்தகைய வியப்புள்ள விஷயம்!" என்று இயம்புகின்ருன்.

தலைமகன் தலைவியின் உள்ளக் கருத்தைச் செவ்விதின் அறிந்துகொண்டான் என்பதையும், தலைவியும் தலைமகன் உட் கருத்தை நன்ருக உணர்ந்து கொண்டாள் என்பதையும் ஆசிரியர் திருவள்ளுவர் மிகவும் அழகாகக் கூறியிருக்கின் றனர். அதாவது,

"கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனு மில."

இரு காதலரும் ஒருவரை ஒருவர் முதற்கண் நோக்கிய ஞான்றே, அந்நோக்கினல் உண்டாகிய எடுத்திசைத்தற் கிய லாத தனி யின்பமானது ஒருவருக்கொருவரை அடிமையாக்கி விட்டது. அதாவது அவ்விருவர் பார்வைகளும் ஒரே தன்மை யாகவும், ஒரே அளவாகவும், ஒரே நோக்கத்துடனும், ஒரே இன்பத்துடனும் ஒளிர்ந்தமையால், அவர்கள் ஒருவரை ஒருவர் "நான் உன்னைக் காதலிக்கின்றேன்" என்று கூருமலேயே காதலித்து விட்டதாக இருவருக்கும் அவர்கள் பார்வைகளே விளக்கிவிட்டன. அந்நோக்குகளுக்கு ஏற்பட்டுள்ள ஆற்றல் வாய்ச்சொற்களுக்கு ஏற்பட்டுள்ள ஆற்றலினும் மிகவும் விழுமியது ஆதலால், அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, "நான் உன்னைக் காதலிக்கின்றேன்," என்று கூறவேண்டிய அவசியமே நிகழவில்லை என்றும், அங்ஙனம் ஒருவரிடம் ஒருவர் கூறியபோதிலும் அதனல் ஒரு பயனுமில்லை என்றும் கூறுகின்ற புலவர் நுண்ணிய கருத்து எத்துணைச் சிறந்த தாகவும், எத்துணை இன்பம் பயக்கவல்லதாகவும் இருக் கின்றது என்பதைச் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.

உலகிலுள்ள இன்பங்கள் அனைத்தும் ஐம்புலன்களா லன்ருே அனுபவிக்கப்படும்? நாவிற்குச் சுவை நல்கக்கூடிய ஓர் அருங்கனியானது செவிக்கு இன்பத்தை நல்குமோ? நல்காது. செவிக்கு இன்பத்தைச் சொரிகின்ற இனிய கீதம்

நாவிற்குச் சுவையை நல்குமோ? நல்காது. நாசிக்கு நல்லின் பத்தை அளிக்கக்கூடிய நறுமணம் நாசிக்கு இன்பத்தை நல்குமேயன்றி நாவிற்கோ அல்லது செவிக்கோ இன்பத்தை அளிக்குமோ? அளிக்காது. கண்ணுக்கு விழுமிய இன்பத்தைப் பயக்கின்ற நற்காட்சியானது கண்ணிற்கு இன்பத்தைத் தருமேயன்றி நாவிற்கும், செவிக்கும், நாசிக்கும் இன்பத்தை நல்குமோ? நல்காது. தேகத்தின் இணைப்பால் உண்டாகின்ற இன்பம் தேகத்திற்கே உண்டாகுமேயன்றி மற்றப் புலன்களுக்கு உண்டாகுமோ? உண்டாகாது. ஆகையால், உலகில் ஐம்புலன்களுக்கும் இன்பம் தேடுபவர் ஐந்து துறைகளிலும் ஐந்து வெவ்வேறு பொருள்களை நாடித்தான் இன்பம் நுகர்தல் வேண்டும். ஆனால், ஒரு காதலன் தான் இன்பம் நுகர்ந்த பாவையினிடத்துண்டாகிய இன்பத்தைக் குறித்து, "நான் என் காதலியின்மாட்டு எய்திய இன்பமானது ஐம்புலன்களுக்கும் ஒருங்கே இன்பத்தை ஈந்தது. இதனினும் சிறந்த இன்பமும் வேறு ஒன்று உண்டோ? ஐந்துவகையான இன்பங்களும் இவள் ஒருத்தியினிடத்திலேயே பொதிந்து கிடக்கின்றன. ஆகையால், இவளே எல்லாத்துறைகளில் உண்டாகின்ற இன்பங்களுக்கு எல்லாம் இருப்பிடம்," என்று கூறுகின்ற சிறப்பினை நாயனார்,

> "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
> மொண்டொடி கண்ணே யுள,"

என்று எத்துணை நுட்பங்கள் பொலிய ஒரு காரிகையின் இன்பத்தை விளக்கியுள்ளார் என்பதைச் சிறிது ஆழ்ந்து நோக்கினால், நுண்ணிய அறிவும், ஆழ்ந்த அருமைகளைச் சிந்திக்கும் ஆற்றலும் வாய்க்கப் பெற்ற மக்களுக்கு உண்டாகும் இன்பமும், வியப்பும் இத்துணையன என்று அளவிட்டுக் கூறவியலாது.

(தொடரும்)

கம்பரும் காதல் மணமும்

[வித்துவான். மா. இராசமாணிக்கம்]

(கூஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கோசலக் குரிசில் சென்ற பின்னர் வைதேகி தன் உயிர் உடலில் தங்கப்பெறுது துடித்தாள். அவளது நிறை என்னும் அங்குசம் நிமிர்ந்து போயது. குரிசிலின்பின்னே போன மனதைத் தன்பால் மீண்டும் இழுக்கச் சக்தியற்றவளாய்க்

காதல் நோயால் நலிந்தாள். அவ்வளவில் அந்தி நேரம் வந்தது. அஃது அவளுக்குப் பூதம்போன்று இருந்தது. மாலை வானத்தைச் சீதை, குளங்களாய நெருப்பிலே காய்த்து மலரின் மணமாகிய விஷத்தைப் பூசிக்கொண்டு உலவுகின்ற தென்றல் காற்று என்ற வேல், அனங்கன் எய்த அம்புகளால் உண்டான புண்களில் பாய, அதனால் நலிகின்ற உணர்வும் அழகும் உருகிச் சோர்கின்ற சீதையின் உயிர் உண்ணும்படி விளங்கிய மாலை வானத்தை நோக்கி 'இயமனது உருவம் இது தானோ?'' என்றாள்.

'கயங்க ளென்னும் கல்தோய்ந்து, கடிநாண் மலரின் விடம்பூசி
இயங்கு தென்றல் மன்மதவேள் எய்த புண்ணின் இடை நுழைய
உயங்கு முணர்வு நன்னலமு முருகிச் சோர்வாள் உயிருண்ண
வயங்கு மாலை வானேக்கி இதுவோ கூற்றின் வடிவென்றாள்!'

(க. ரா: மி. காட்சிப் படலம்)

இங்ஙனம் விரகவேதனையால் அந்திக்கு ஆற்றாளாகிப் புலம்பிய வைதேகி, இருளைக் கண்டதும் மிகச் சோர்வடைந்தாள். (கோசலக் குரிசிலின்) 'கரிய நிறத்தை என்போல் எல்லோரும் எண்ணுவதால், அவ்வெண்ணத்தின் தொகுதிதான் இங்ஙனம் இருளாகப் பரந்ததோ! என்று' வியர்த்தாள். பின்னர், அன்றில் கூவுதலுக்கு ஆற்றாளாகி, 'மன்மதன் என்னைத் துன்புறுத்த உன்னை ஏவினனோ? அல்லது யான் செய்த தீவினையே அன்றில் என்ற உருவோடு வந்ததனையோ'? என்று கூறி வருந்தினாள். இதனைப் பற்றி விரிக்கின் பெருகுமாதலின் ஈண்டு விரித்திலம்.

இருள் சென்ற பின்னர் தண்கதிர் இன்புறத் தோன்றினான். இன்புறத் தோன்றிய மதியைத் தனக்குத் துன்புறத் தோன்றியதாக வைதேகி நினைத்தனள். அதற்கு அவள் ஆற்றாளாகி, 'அதிகப்படும் இருளாக வந்து உலகை விழுங்கி, மேன்மேலும் பருக்கின்ற பெரியதோர் நெருப்பினிடையே முளைத்த வெண்ணெருப்பே! நீ நீங்காத அழகு உடைய அவருக்கு (இராமனுக்கு) நிறத்திலே தோற்று ஒரு புறம் ஒதுங்கி ஏங்கிக் கிடக்கும் அலைகளை வீசும் கடலுக்கும் எனக்கும் கொடியன் ஆனையோ? என் இது?'

'நீங்கா மாமை யவர்தமக்கு நிறமே தோற்றுப் புறமேபோய்
ஏங்காக் கிடக்கு மெறிகட்டும் எனக்குங் கொடியை யானையே!
ஓங்கா நின்ற இருளாய்வந் துலகை விழுங்கி மேன்மேலும்
வீங்கா நின்ற கருநெருப்பி னிடையே வெழுந்த வெண்ணெருப்பே'

(க. ரா. மி. காட்சிப் படலம்):

இவ்வாறு புலம்பிய சனகி, அன்னப் பறவை நெருப்பில் பட்டதுபோல் மலர்கள் அடர்ந்த சயனத்தில் புரண்டாள். இங்ஙனம் பலவாறு காதல் நோயால் நைந்து கூறிய வைதேகி யின் நிலையை அருகே யிருந்து கண்டவர் போல் கம்பர் இரக் கங்கொண்டு இயம்பும் இனிய கருத்து இனிமையை ஊட்டு கின்றது.

ஆகையால் காதலால் விளையும் நோய்க்கு மருந்தும் உண்டோ? எனக் கம்பர் கழிவிரக்கங் கொள்கின்றார்.

'வாச மென்கல வைக்களி வாரிமேல்
பூசப் பூசப் புலர்ந்து புழுங்கினள்;
வீச வீச வெதும்பினள்; மென்முலை
ஆசை நோய்க்கு மருந்துமுண் டாங்கொலோ'

என்று காதல் நோய்க்குக் காதலரே மருந்தன்றி மலர் கள் முதலானவை மருந்தன்று என்பதைக் கூறி, சீதைக்கு உபசாரம் செய்த தோழியரை நோக்கி நகுகின்றார்.

சீதையின் செய்தி இங்ஙனமாக, இராமன் கன்னியைக் கண்ட அன்றிரவு கண் துயின்றிலன். அந்நிலையைக் கம்பர் பிரான்,

'இருள்
கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்
தனியும் தானுமத் தையலு மாயினன்!'

என்று குறுநகை தோன்றக் கூறுகின்றார்; இரவுண்டு, மதியுண்டு, தனிமையுண்டு, தானுண்டு என்றிருந்தான் இரா மன். அப்போது அவன் அகத்தே குடிகொண்ட சனகியின் தோற்றம் முகத்தெதிரே தோன்றக் கண்டான். கண்டு, 'வானத்திலிருந்து பிரிந்த மின்னலின் உருவானது இங்ஙனம் பெண்ணின் நல்ல அழகைப் பெறுவது கூடுமோ? அவ்வுரு வத்தைக் கண்ணினுள்ளும் கருத்தினுள்ளும் காண்கின்றேன். இரண்டிற்கும் வேறுபாடு உணர்ந்திலேன்' என்று கூறி அயிர்த்தான்.

பின்னரும் இராமன், 'அவள் என்பால் அருள் இலாதா ளாயின் நான் என் மனதின் ஆசையால் வெருட்டுகின்ற காமநோய் தீரத்தக்க மருந்தாக அவளை நான் என் விழி களால் விழுங்கி இருப்பதால், தெளிவுற்ற இவ்வுலகில் சரா சரப் பொருள்கள் அனைத்தும் எனக்கு அவளது அழகிய உருவாகவே தோன்றலாயின' என்று 'மெய்க்காதலின் தத்து வத்தை'க் கம்பர் இராமன் கழறுவதாகக் கூறி நமக்கு உண்மையை விளக்குகின்றார்.

'அருளி லாளெனி னும்மனத் தாசையால்
வெருளி நோய்விடக் கண்ணின் விழுங்கலால்
தெருளி லாவுல கிற்சென்று நின்றுவாழ்
பொருளெ லாமவள் பொன்னுரு வானவே!

(க. ரா: மி. காட்சிப் படலம்)

இச்செய்யுளில் இராவன் 'அருள் இலாள்' என்று சீதையைக் கடிகின்றான். இஃது அர்த்தமற்ற சொற்களே யாகும். காதல் நோயால் நலியும் ஆண் பெண் புலம்பும் பழக்கமான சொற்களே இவை. இராமன் கூற்றைக் கவனித்தால், சனகி எவ்வித அருளை இவன்மாட்டு அந்நிலையில் செய்யக்கூடும்? மணமாகாத முன்னர் இவனண்டை வந்து அவள் எங்ஙனம் அருள் சுரக்கக்கூடும்? இங்ஙனமே மறுநாள் சீதையும் பிதற்றுகின்றாள்; 'மதனன் தன் நீண்ட வெற்றி வில்லால் என் நெஞ்சு அழியும்படி, பஞ்சை அழிக்கும் தீயைப்போல் என் ஆவியைப் பற்றக் கொடிய பாணங்களை எய்ய, அதனால் துன்புறும் மாதரை உய்ய வந்து "அஞ்சல், அஞ்சல்" என்று அபயம் அளிக்காத ஆண்மை என்ன ஆண்மையோ?' என்று தன்னை ஆட்கொள்ளாதிருக்கும் இராமனைக் கடிந்து கூறுகின்றாள்.

"பஞ்சரங்கு தீயினுவி பற்றநீடு கொற்றவில்
வெஞ்சரங்கள் நெஞ்சரங்க வெய்யகாம னெய்யவே
சஞ்சலங் கலந்தபோது தையலாரை யுய்யவந்
தஞ்சலஞ்ச லென்கிலாத ஆண்மை என்ன ஆண்மையோ?"

(க. ரா: கார்முகப் படலம்)

தாமரைப் பொய்கையிடை யிருந்த மண்டபத்தில் வீற்றிருந்த வைதேகி, அங்கு இராமன் எதிர்வந்து தோன்றவில்லை என்று பழி கூறினளோ? இஃது காதலர் பால் தவழும் வெற்றுரைகளே?

இந்நிலையில் வைதேகி, தன் வளர்ந்து உயர்ச்சி பெற்ற கொங்கைகளை நோக்கி, 'இளைத்தலன்றி மிகக் கொழுத்த கொங்கைகளே! நீங்கள் பருத்து விம்மி என்ன பயனைப் பெற்றீர்? சந்திரன் போன்ற முகத்தையுடையவரும் யாவராலும் வளைப்பதற்கு முடியாத வில் ஒன்றினைக் கையில் தாங்கிய சிங்கம் போன்றவரும் ஆகிய அப் பெருமகனது மார்பினுள் பொருந்தி அனுபவிக்கின்ற நலம் உங்களுக்கு வேண்டுமானால், இவ்வாறு பருப்பதை விட்டு, அதற்கு வேண்டிய தவங்களைச் செய்யுங்கள்' என்று கூறுவது காதல் இன்பத்தைப் பெருக்கச் செய்கின்றது.

"இளைக்கலாத கொங்கைகாள்! எழுந்து விம்மி என் செய்தீர்?
முளைக்கலா மதிக்கொழுந்து போலும் வாண் முகத்தினன்
வளைக்கலாத விற்கையாளி வள்ளல் மார்பினுள்ளுறத்
திளைக்கலாகு மாகிலான செய்தவங்கள் செய்மினே!"

(க. ரா: கார்முகப் படலம்)

திருமணத்தன்று முன்னாள் இரவிலும் காதலர் இருவரும் தனித்தனி இருந்து நோயால் நலிந்தனர். இராமனும் துயின்றிலன்; சனகியும் துயின்றிலள். மறுநாள் திருமணம் இனிது நிறைவேறச் சீதை அவைக்கண் வந்தாள். ஆங்கே, இருவரும் தத்தமக்கு இருந்த அன்பைக் கண் பார்வையால் அறிவித்துக் கொண்டு உள்ளம் மகிழ்ந்தனர். பின்னர், திருமணம் திருவுடன் நடந்தேறியது.

திரு. திவான்பகதூர். பொ. சுப்பையா முதலியாரவர்கள் தலைமையுரை

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்கப்
பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்."

"சைவசமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள்வெளி காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாம் முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் சகத்தீரே."

(தாயுமானவர்)

நமது சைவத்துக்கும் தமிழுக்கும் சிறந்த நாடாய் விளங்குவது தென்பாண்டி நாடேயாகும். தமிழின் பேராசிரியராகிய அகத்திய முனிவர் தென்பாண்டி நாட்டிலேயுள்ள பொதிய மலையிற்றான் எழுந்தருளி யிருக்கின்றார். சைவத்திற்கு இரு கண்மணிகள்போல் விளங்கும் நமது மாபாடிய ஆசிரியராகிய மாதவச் "சிவஞான முனிவரும்," ஐந்தாவது ஆண்டு வரை மூகையராயிருந்து திருச்செந்தூர் முருகப்பெருமான்

(குறிப்பு) தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் 15-வது ஆண்டுவிழாவில் நிகழ்த்திய தலைமையுரை.

திருவருளால் அது நீங்கப்பெற்று, இமயம் வரை சென்று சைவத்தை நிலைநாட்டிய நமது "குமரகுருபர சுவாமிகளும்" இந்நாட்டிற்றான் திரு அவதாரஞ் செய்துள்ளார்கள். இத் தகைய பெருமை வாய்ந்த திருநாட்டில் தமிழுக்கும் சைவத் திற்கும் உறைவிடமாகிய திருநெல்வேலி என்னும் திருநகரம் திருஞான சம்பந்தப் பெருமானால் தேவாரம் அருளிச்செய்யப் பெற்றதும், காந்திமதி சமேத நெல்லையப்பர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பதுமாகிய திருத்தலமாயுள்ளது.

இந்நகரத்தில் நமது சைவமும் தமிழும் தழைப் பதற்காகவே தோற்றுவிக்கப் பட்டுள்ள "சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின்" அறநிலையங்களாகிய தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் 15-வது ஆண்டுவிழாவும், தென் னிந்திய தமிழ்ச்சங்கத்தின் 7-வது ஆண்டுவிழாவும் இவண் நடைபெறப் போவதறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ் ஆண்டு விழாக்களில் தலைமை தாங்கும்படி என்னைக் கழகத்தார் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு நான் தகுதி யுடையன் அல்லனாயினும், சைவத்திற்கும் தமிழுக்கும் இயன்ற தொண்டு செய்யவேண்டுமென்னும் பேரவாவினாலே தலைமைதாங்க ஏற்றுக்கொண்டேன். இன்று நடைபெறப் போவது "சைவசித்தாந்த சங்கத்தின்" 15-வது ஆண்டு விழாவாகும். நமது சித்தாந்த சைவமானது ஏனைய சமயங் களைப்போல ஒருகுறுகிய கொள்கையுடையதன்று. ஒரு காலத்திற்கும் ஒருதேசத்திற்கும் ஒருவகுப்பார்க்கும் உரியது அன்று. மற்றைச் சமயங்களோடொப்ப ஒரு சமயமாக எண்ணப்படினும், உண்மையாக நோக்கின், எல்லாச் சமயங் களையுந் தனக்கு உறுப்பாகக்கொண்டு விளங்குவதொரு சமய அரசாகும்.

"அன்பே சிவம்" என்னும் திருமந்திரப்பாட்டே அதன் உண்மையைத் தெள்ளிதிற் காட்டும். நமது சமயம் ஒரு சமயத்தையும் வெறுக்காது எல்லாச் சமயங்களையும் படி முறையாகக் கொண்டுள்ள காரணத்தினாலேயே இது விரிந்த கொள்கையுடையதென்பதை விளக்கும். "யாதொரு தெய்வங் கொண்டீர்—அத்தெய்வமாகி யாங்கே—மாதொரு பாகனார்தாம் வருவர்" என்னுஞ் சிவஞான சித்தித் திரு மொழியே இவ்வுண்மையை நிலைநிறுத்தும்.

பண்டைக்காலப் பெருமக்களின் மனிதப்பிறப்பு மற்ற எல்லாப் பிறப்புகளினும் மேலானது. "அரிது அரிது மானிட

ராதல் அரிது" என்றபடி அறிந்து, அதன்பயனை அடையத் தங்களுடைய பிள்ளைகளை ஒழுக்கமுடைய குருக்களிடத்து அனுப்பிக் கல்வியைக் கற்கும்படி செய்தார்கள்.

அக் குருக்கண்மார்கள் தந்நலங்கருதாது உயிர்கள் மாட்டு அருள்கொண்டவர்களாக இருந்தபடியால், தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட இளைஞர்களைத் தம்முடைய மக்களாகவே கருதித் தம்மிடத்தில் இருக்கும்படி செய்து கல்வியைக் கற்பிக்கின்ற காலத்து, ஆரம்பத்திலிருந்தே கடவுள் உண்டு, மனிதராய்ப் பிறந்தவர்கள் கடவுளை வழிபடல் வேண்டும் என்று நூல்களைக் கற்பிப்பதற்கு முன் கடவுள் வாழ்த்து என்ற தோத்திரங்களைச் சொல்லிக் கொடுப்பார்கள். அக்கடவுள் வாழ்த்துக்களும் எந்த எந்த நூலை மாணாக்கன் படிக்கின்றானோ, அந்த அந்த நூல்களுக்குத் தக்கவிதமாகச் சொல்லப் பட்டிருக்கும்.

இரண்டாவதாக, கற்பிக்கும் நூல்களினுள்ள பொருள்களோ நீதிகளும், தருமங்களும் நிறைந்தனவாக இருக்கும். நீதியைப்பற்றிச் சொல்லுங் காலத்து முதலில் தாய், தந்தை, தமையன், உபாத்தியாயன், ஞானாசிரியன் ஆகிய ஐவரையும் கடவுளைப்போல் எண்ணி அவர்கள் சொல்லுகின்றபடி நடக்க வேண்டும் என்று அறிவிக்கும். இரண்டாவதாகத் தன் தொடர்புடையவர்களிடத்து எக்காலத்தும் விடாது செலுத்துகின்ற ஆசையாகிய அன்பினைச் செலுத்தல் வேண்டும் என்று கூறும். மூன்றாவதாகத் தொடர்புடையவர்களிடத்தில் அன்பு செலுத்துவதுபோல், கடவுளாற் படைக்கப்பட்ட எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி அருளுடையவனாக இருக்க வேண்டுமென்று கூறும். நான்காவதாக, உலகத்தில் உள்ள எல்லாச் சாதியாரிடத்தும் எல்லாச் சமயத்தாரிடத்தும் அவரவர் சாதி சமயம் என்பதைப் பாராமல் நடுவுநிலைமை என்பதைச் செலுத்த வேண்டும்; நடுவு நிலைமையானது சிறப்பாக அரசனுக்கும் அரசனாணை செலுத்தும் நீதிபதிகளுக்கும் இன்றியமையாதது; அதைச் செலுத்துங் காலத்தில், தான் தீர்மானிக்கவேண்டிய செய்திகளை வாதி பிரதிவாதிகளாகிய இரண்டு பக்கத்தாரிடத்தும் நன்றாகக் கேட்டுச் *"சமன் செய்து சீர் தூக்குங் கோல்போல்" சிறிதுங் கோணுதலில்லாமல் நீதி செலுத்துதல் வேண்டும் என்று கற்பிக்கும்.

ஐந்தாவது, இல்லறத்தானுயுள்ளவன் தக்கவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற்காகவே இல்லறத்

* குறள். நடுவு நிலைமை. அ.

தானாயிருக்க வேண்டுமென்றும், அவ்விதமிருக்கின்ற காலத்துத் தன்னுடைய கடமைகளைச் செய்யப் பொருள் வேண்டுமாதலால் அப்பொருளைத் தீயவழியிற் சிறிதும் ஈட்டாது நல்வழியிலேயே ஈட்டுதல் வேண்டுமென்றும், ஈட்டிய பொருளை அறநூல்களிற் கூறியாங்கு தக்கவர்களுக்குக் கொடுத்துத் தானும் உண்ணவேண்டும் என்றும் கற்பிக்கும். அன்றியும், தான் இல்லறத்தை நடத்தும்போது தனக்கு ஒரு துணை வேண்டுமாதலால் அதற்கென்று அமைக்கப்பட்ட மனைவியோடிருந்து இல்லறத்தை நடத்த வேண்டுமென்றும், அம்மனைவியினிடத்து அன்போடு கூடி இருக்கவேண்டு மென்றும், அவ்விதமிருந்தால் மட்டும் இல்லறம் செவ்வனே நடக்குமென்றும், நல்ல பிள்ளைகளைப் பெறுதல் கூடுமென்றும், கற்பிக்கும். ஆறுவது, பொதுவாக எல்லா மக்களிடத்தும் அன்பாகவும், இனிமையாகவும் பேசுதல் வேண்டும். இனிமையாகப் பேசாவிடில் *காயும் பழமும் கலந்திருக்கின்ற மரத்தில் பழத்தை விட்டுவிட்டுக் காயைப் பறித்து உண்பது போல், உலகத்தில் அடைய வேண்டிய பயனை அடைவதற்கு இல்லாமற் போகும் என்றும், ஒருவன் தனக்குச் செய்த உதவிகளை மறந்துவிட்டால் மிகுதியும் பாவத்தை அடைய நேருமாதலால் செய்த உதவியை மறக்கக்கூடாது என்றும், எல்லாரிடத்தும் எக்காலத்தும் அடக்கமுடையவனாய் இருக்க வேண்டுமென்றும், அந்த அடக்கமேதான் அவனுக்குப் புகழைக் கொடுக்குமென்றுங் கூறும்.

அதுவல்லாமலும், தன் மனைவியரல்லாத வேறு மகளிரைத் தன் தயாகவும் சகோதரியாகவும் கருதவேண்டுமென்றும், பிறரைப் பற்றிப் புறங்கூறுதல் ஆகாது என்றும், பிறர் செல்வத்தைக் கண்டு பொறாமை கொள்ளுதல் தவறு என்றும் கற்பிக்கும்.

இவ்வித நூல்களைக் கற்பிக்கின்ற ஒழுக்கமுடைய ஆசிரியர், கல்வியைக் கற்பிக்கின்ற காலத்து, கல்வியைக் கற்கின்ற முறை இது வென்றும், கற்கவேண்டிய நூல்கள் இவையென்றும், கற்றவர்கள் அடையும் பயன் இது வென்றும், கல்லாமையினால் வருங்கேடு இதுவென்றும், கற்றலோடு நில்லாமல் ஒழுக்கமுடையவரிடத்துக் கேட்டலும் வேண்டும் என்றும் கற்பிப்பார்.

மேலும் எந்தக் காரியத்தைச் செய்யப் புகுந்தாலும், செய்யத் தகுந்த காரியமோ, தகாத காரியமோ என்று ஒரு

* குறள். இனியவை கூறல். 10-ன் கருத்து.

முறை, இருமுறை, மும்முறை நன்றாக ஆராய்ந்து செய்வதுடன் பிறரையுங் கலந்து செய்தல் வேண்டுமென்றும், பெரியவர்களைத் துணைக்கொள்ளுதல் வேண்டுமென்றும், அறிவில்லாதவர்களைச் சேருதல் கூடாதென்றும் புத்தி புகட்டுவார். அன்றியும், நட்புக்கொள்ளுங் காலத்துத் தக்கவர்களையே நட்புக்கொள்ளுதல் வேண்டுமென்றும், தகாதார்களுடன் நட்புக்கொண்டால் நன்மை யடைவதற்குப் பதிலாகத் தீமையே அடையநேருமென்றும் கூறுவார். அதுவல்லாமலும், நூலைக் கற்பிக்கும் அக் குரு கற்கின்ற மக்களுக்கு இளமையிலிருந்தே மனத்தால் செய்ய வேண்டுவது இது, மொழியாற் செய்ய வேண்டுவது இது, மெய்யாற் செய்ய வேண்டுவது இது என்று அறிவிக்கின்ற காலத்து, மனத்தால், நல்ல பொருள்களைச் சிந்திக்க வேண்டும், வாயால் நல்ல பொருள்களைக் கூறல்வேண்டும், உடலால் நல்ல செயல்களைச் செய்தல் வேண்டும் என்று கூறுவார். இவைகளை யெல்லாம் செய்யுங் காலத்து, விரைந்து செய்ய வேண்டுவதை மெதுவாகச்செய்யாமலும், மெதுவாகச் செய்யவேண்டுவதை விரைந்து செய்யாமலும், எந்தக் காரியத்தையுங் குறித்த காலத்தில் முறையாகச் செய்ய வேண்டுமென்றுங் கற்பிப்பர்.

இவ்விதமாக நூல்களைக் கற்றுக்கொள்ளுதலும், இல்லறத்தாறாய் இருத்தலும் தனக்கு மாத்திர மல்லாமல், பிறர்க்கும் பயன்படும்படி இருக்கவேண்டியதற்காதலால், உடம்பை நோயணுகாவண்ணம் தூய்மையாய் வைத்துக்கொள்வதிலும் அளவறிந்து உண்பதிலும், அளவறிந்து உறங்குவதிலும், அளவறிந்து வேலை செய்வதிலும் உள்ள நலங்களைக் கற்பிப்பார்.

இன்னும் உறுப்புகளெல்லாம் வலிமைபெறும்படி உடற்பயிற்சி முறைகளைக் கற்பிப்பர். அன்றியும், பழியஞ்சிப் பொருளைச் சம்பாதிக்க வேண்டுவதால் மாணவர்கட்கு எல்லாவற்றினும்சிறந்ததாகிய தொழில் உழவுத்தொழில் என்றும், பின்னர் நெய்தற் றொழிலென்றும், அதன்பின்னர் வாணிகம் என்றும். அதன்பின்னர் அரசர்பணி செய்வது என்றும் கற்பிப்பார்; ஏனெனில் "†உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்" என்னும் பொதுநூல் மொழிக்கிணங்க, தானும் அறத்தொடு வாழ்ந்து, பிறனுக்கு அடிமையாகாது வாழ்வதற்குக் கூடுமானதாக இருத்தலால் உழவையே மேன்மையாகக் கொள்கின்றார்கள்; வாணிகத்தை "*வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்—பிறவுந்தமபோற்

---

* குறள். உழவு. 3. † குறள். நடுவுநிலைமை. ய

செயின்.'' என்ற வள்ளுவர் வாய்மொழியின்படி செய்கின்ற தகுதியுடையவனாக இருப்பானானால் அது பொருத்த முடைய தென்றும், அதுவும் பெருமுதல் உடையவனுக்கே கைகூடும் ஆதலால் அதை மூன்றாவதாகவும் கைக்கொள்ளுகின்றனர்; மற்று, சேவக விருத்தியோ கடைசி என்று கூறுகின்றார்கள் என்று பிழைக்கும் வழிக்குரிய முறைகளையெல்லாம் நன்றாகக் கற்பிப்பர். இத்தகைய நூல்களை யெல்லாம் முற்காலத்து இளைஞருக்கு நல்லாசிரியர்கள் தம்மிடத்தேயே இருக்கச் செய்து கற்பித்தும், ஒழுக்க நெறியில் ஒழுகச்செய்தும், நோய் கொள்ளாவண்ணம் பழக்கியும், பிழைக்கும் வழியையுங் கற்பித்ததனால், முற்காலத்திருந்த மக்க ளெல்லாம் நல்வழிநின்று பொருளைச்சேர்த்து அறவழி யிற் செலவுசெய்து தமக்கென்று வாழாது பிறர்க்கென்றே உலகத்தில் வாழ்ந்து நன்மக்களைப்பெற்று நீண்ட ஆயுளுட னிருந்து தம்பெயரை நாட்டிச் சென்றனர்.

இக்காலத்தோ, மக்களைக் குருகுல வாசம் என்பதொன் றில்லாமல் அரசாங்கத்தாரால் அமைக்கப்படும் பள்ளிக்கூடங் கட்கும், இரண்டு மல்லாது பொதுமக்களால் நிறுவப்படும் பள்ளிக்கூடங்கட்கும் கல்விகற்க அனுப்புகின்றார்கள். முதலா வது, அரசாங்கப் பள்ளிக்கூடங்களில் "கடவுள் வழிபாடு" என்பதைக் கற்பிப்பதே இல்லை. ஏனெனில் அரசர்கள் நம் முடைய நாகரீகம் தெரியாத அன்னிய நாட்டார்களாதலா லும், பல சமயங்களடங்கிய இந்திய நாட்டில் தாம் சமய விஷயங்களிலே தலையிடக்கூடாதென்று கடவுள் வழிபாட்டிற் குரிய நூல்களையும் பாக்களையும் அங்குப் போதிப்பதற்கு இல்லை, ஏனைய புறமதத்தவர் கலாசாலைகளில் தம்மதம் நாட்டு வதற்கென்றே நிறுவப்பெற்றிருக்குங் கொள்கையால் தங்கள் மதத்தை நாட்டுவதற்கு உரிய கல்வியைக் கற்பித்து, நம் நாட்டு மதங்களின் உண்மையைக் கற்றுத் தெரிந்து கொள்ளா மல் அதைப் புறக்கணித்து மாணாக்கர்களை ஒரு மதத்திலும் பற்றில்லாதவர்களாக ஆக்கி விடுகின்றார்கள்.

நம்மக்களால் ஏற்படுத்தப்படுகின்ற பள்ளிக்கூடங்களி லுங்கூட *"அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி—பகவன் முதற்றே யுலகு'' என்று பொதுமறையிற் கூறியபடி, பொது வாகிய கடவுள் வாழ்த்தைக்கூட பயிற்றுவிக்காது, "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை,'' "மற்றுப் பற் றெனக்கின்றி நின்றிருப்பாதமே மனம் பாவித்தேன்,'' "கல் லார் நெஞ்சினில்லா னீசன்'' "சொல்லாதாரோ டல்லோ

* குறள். கடவுள்வாழ்த்து. க

நாமே," "அரியானை அந்தணர்தஞ் சிந்தையானை," என்று முறையே, ஆளுடையடிகளும், ஆளுடைநம்பியும், ஆளுடைப் பிள்ளையும், ஆளுடையரசும் உலகோர் உய்யும்படி மேல்நிலையில் நின்று ஓதிய—திருவாசகத் தேவாரங்களைக் கற்பதற்கு இல்லாமல், இம்மை, மறுமை, வீடு என்கின்ற மூன்றையும் இழக்கின்றார்கள்.

இனி இரண்டாவதாக, முன்னர் நாம் கூறிய வண்ணம் நல்லாசிரியனிடத்துக் கற்கவேண்டிய நூல்களைக் கல்லாது, பின்னர் பயன்தராதனவும், உலக அறிவுக்குப் பொருந்தாதனவுமான சில நூல்களைக் கற்கின்றனர். அதனால் கற்கவேண்டிய முறைப்படி கல்லாமலும், கற்ற நூல்களிற் சொல்லிய நெறிப்படி ஒழுகுவதற் கில்லாமலும் * "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக," என்னும் பொதுமறையின் திருமொழியை அறிந்து கொள்வதற்கு இல்லாமற் போகின்றனர். இவ்விதம் இருப்பதால் பன்னெடுநாள் கல்வியைக் கற்றுப் பட்டதாரிகளாய் விடினும் † "கண்ணுடையரென்போர் கற்றோர் முகத்திரண்டு—புண்ணுடையர் கல்லாதவர்." என்றபடி ஞானக்கண் கொள்ளாது ஊனக் கண்ணையே கொண்டு உறுதிப்பொருளை யறிவதற் கில்லாது வழியிருக்கக் குழியில் வீழ்கின்றனர்.

அற்றேல், நன்னூல்களைக் கற்றற்கு இல்லாவிடினும் தமக்கு ஒழிந்த காலத்தேனும் மதவிஷயங்களைப் போதிக்கும் நல்லாசிரியச் சபைகளில் ‡ "இழுக்க லுடையுழி ஊற்றுக் கோலற்றே—ஒழுக்க முடையார்வாய்ச்சொல்" என்றபடி அவ்வாசிரியர்கள் கூறும் வீட்டிற்குரிய பயனையுங் கேளாமல் போய் விடுகின்றார்கள். இவ்விதம் கல்லாமலும் கேளாமலும் போய் விடுவதுடன், இன்னும் பெருங் கேட்டிற்குக் காரணமாகிய காம இன்பத்திற்குரிய வரிப்பாடல்களாகிய இசைப்பாட்டுகளைக் கேட்டு மிகுதியும் இன்பம் நுகர்வார் போல "கரும்பிருக்க இரும்புகடித் தெய்த்தவாறே" என்னும் தேவார மொழிக்கிணங்க உண்மையறியாது, பாகனில்லாத யானை போல நெறியல்லா வழிச்சென்று உயிரையும் போக்குகின்றார்கள். இவ்வளவு மாத்திரமோ, மேல் நாட்டவரிடத்துக் கற்க வேண்டிய குறித்தகாலத்துச் செல்லுதல், விடாது ஒழுங்காகச் செல்லுதல், ஊக்கத்தோடு செய்தல், விடாமுயற்சியாயிருத்தல், கூட்டுறவுச்சங்கம் அமைத்தல், ஒருவரை ஒருவர் வஞ்சியாமை, ஒருவரோடொருவர் சினங் கொள்ளாமை, ஒற்

---

* குறள். கல்வி. ௧ † குறள். கல்வி. ௩ ‡ குறள்—கேள்வி—௫

றுமை, திரைகடலோடியுந் திரவியந்தேடுதல், ஒழுங்காக வரவு செலவுக்கணக்கு வைத்தல், வருவாய்க்குத்தக்க அளவாகத் தான் உண்டு உடுத்தல், தான் பொருளைச் சேர்த்தல், தன் மக்களையும் அவ்வழியே நிறுத்துதல், இறக்கும் அளவும் ஒருவர் உதவியும் கருதாது தம்முடைய சொந்தப் பொருளிலேயே உண்டும் உடுத்தும், இறக்கின்ற காலத்துத் தம் பொருள்களைப் பலவிதமாகப் பங்கிடுவதில் சரியான அறத்திற்கென்றும் ஓர் பகுதியைக் கொடுத்தல் ஆகிய நற்குணங்களை யெல்லாம் விட்டு விட்டு, அநேகர் மேல் நாட்டிற்குரிய வெப்ப தட்பத்துக்குத் தக்க அளவாக உடையை உடுத்தியும், சிலர் தூய்மையல்லாத ஆகாரங்களை உண்டும், உடலுக்குப் பல கெடுதல்களைச் செய்யக்கூடிய சுருட்டுப் பிடித்தும் * "ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்—சான்றோர் முகத்துக் களி" என்று பெற்ற தாயாலும் வெறுக்கக்கூடிய மயக்கப்பொருள்களைக் குடித்தும், † "தூண்டிற் பொன் மீன் விழுங்கியற்று" என்றபடி சூதாட்டத்தை விரும்பியும், நாடகங்களிற் சென்று நல்ல அறிவை யிழப்பதற்குக் காரணமாகிய நடனங்களைப் பார்த்தும், தகாத காரியங்களைச் செய்யும் நெறிகளைக் கற்பிப்பனவாகிய படக் காட்சிகளைப் பார்த்தும் தம் வாழ் நாட்களை வீண் நாளாக்கி, "சின்னாள் பல்பிணிச் சிற்றறிவுயிர்" என்பதை நிலைநாட்டிச் செல்லுகின்றனர்.

இதுவன்றியும், பண்டைக்காலத்திருந்து ஒவ்வொருவகுப்பினரும் செய்து வந்த தொழில்களை மறந்து எல்லோரும் உலக அறிவிற்குரிய கல்வியைக் கற்க முயலுவதால், அரசாங்கத் தொழிலிலேயே ஆசைப்பட்டு ஒருவர் இருக்கவேண்டிய இடத்துக்கு ஆயிரக் கணக்கானவர்கள் முயன்று உத்தியோகங் கிடைக்காமல் கற்ற கல்வியால் அடையக்கூடிய இம்மைப் பயனையும் இழக்கின்றார்கள்.

நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வேலைக்குப் பெரும் பொருள் செலவழித்துக் காலமெல்லாம் நீதியைப் பேசுவோமென்று அதற்குரிய பட்டங்களைப் பெற்று வாழ்கின்ற மக்களில் பலர், தாங்கள் சென்ற துறையில் தங்கள் எண்ணிக்கையில் ஒருவர்க்கு நூறாக இருப்பதால், பிழைப்பதற்கும் பொருள் கிடையாது சிறியவெல்லாம் பெரியவற்றிற்கு இரையாகிப் பெரும்பான்மையோர் போதுமான வேலையில்லாமல் தவிக்கின்றார்கள். சுக்கு, திப்பிலி, மிளகு என்கின்ற மூன்று பொருள்களால் வெகு சிறு பொருள் செலவழித்து நோயைப் போக்கடிக்கும் திரிகடுகம் என்னும் முறையைக்

* குறள். கள்ளுண்ணாமை. ௩. † குறள். சூது. க.

கொண்ட இந்நாட்டில் மேல் நாட்டு மருத்துவத்தை ஒரு வர்க்கு நூறுகக் கற்கப் புகுந்து நீண்டதோர் காலமும், பெரியதோர் பொருளும் செலவழித்து மருந்து வகைகளையும் இரணவைத்தியத்தையுங் கற்றுத் தொழில் ஆரம்பிக்கையில், இந்த ஏழை நாட்டு மக்கள் அநேகர், மேல் நாட்டு வைத்தியர் களுக்கும் மருந்துக்கும் வேண்டிய அளவு கொடுக்க ஆற்ற லற்றவர்களா யிருக்கிறபடியால் அநேக வைத்தியர்களுக்கு வாழ்க்கைக்கே கட்டமாகிறது. உழவுத் தொழிலைச் செய் வோன் "உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்" என்று மேற்கொண்ட உழவர்களோ, உழுதுண்டு வாழ்பவர், உழுவித்துண்டு வாழ்பவர் என்கின்ற இரண்டு தகுதிகளை யுடைய உழவர்களில் சிலர்மாத்திரம் பிறரைச்கொண்டு உழு வித்து அவர்கட்குக் கொடுக்கவேண்டிய கூலியைக் கொடுத்து மிகுதியை உண்டு தாம் வாழ்ந்திருக்கவும், ஏனையோரெல்லாம் தாமே உழுதற்றொழிலைச் செய்தும், நாற்றை நட்டும், நீர்ப் பாய்ச்சியும், எரு வீசியும், களை எடுத்தும், பயிரைக் காத்தும் உழவுத் தொழிலைச் செய்து உண்டு உடுத்துப் பிறர்க்குத் தானஞ்செய்து வாழ்ந்திருந்த இந்நாட்டில், நவீன நாகரிகத் தால் உழவர்க்குரிய முறையைக் கல்லாமலும், தம் உடல் முயற்சி கொண்டு உழையாமலும் *"செல்லான் கிழவனிருப் பின் நிலம்புலந்து, இல்லாளின் ஊடி விடும்" என்னும் பொது மறையை மறந்து தம் நிலத்தை எட்டிப்பாராமலும் தம் தகுதிக்கு மேற்பட்ட உடையை உடுத்தும், உணவினை யுண்டும், தமக்குத் தகாத வீடுகளைக் கட்டியும், தகுதிக்கு மேற்பட்ட அணிகள் அணிந்தும், நாளுக்கு நாள் வருவாய் குறைந்து மூதாதையர்கள் தேடிவைத்த பொருளையும் தாம் உழுவித்துண்ணும் வேளாளர் என்று தாம் பொய்மை யாகக்கொண்ட நாடகத்தால் கூத்து முடிந்து சிறுமை அடைகிறுர்கள். இனி நெசவுத்தொழிலாளிகளோ இயந்திரங் களினுல் உண்டாக்கப்படுகிற துணிகளின் போட்டியால் அவர்கள் தொழில் செய்வதற்கிடமில்லாமல் வயிறு நிரம் பாது வறுமையால் துன்புறுகின்றனர். இனி, வாணிகஞ் செய்பவரோ பண்டைக்காலத்து முறையில் முதலுக்குத்தக்க அளவாக வாணிகஞ்செய்யாது கடன்கொண்டு வாணிகஞ் செய்தும், கொண்ட வாணிகத்திற்குத்தக்க அளவாகப் பெரும்பொருள் செலவழித்தும், கூட்டுறவுச் சங்கம் என்று மேலைத் திசையோர் செய்வதுபோல் தாம் வாணிகத்தைச் செய்யப் புகுந்து, மேல்நாட்டார் ஒற்றுமையுடனும் ஒருவருக் கொருவர் நம்பிக்கைக்கு விரோதமில்லாமலும் தொழில்

* குறள்-உழவு. கூ.

நடத்துவதுபோல் செய்யாமல், சரியான கணக்கு வைக்காமலும், வழியல்லா வழிகளில் செலவுசெய்தும் 'கணக்குப் பார்க்கில் பிணக்குவரும்' என்றபடி கணக்குப் பார்க்கின்ற காலத்து ஒருவருக்கொருவர் பிணக்குக்கொண்டு, வாய்ச் சண்டையும் கைச்சண்டையும் செய்து வாணிகத்தையும் வருவாயையும் இழப்பதுடன் நில்லாது, நீதிமன்றத்துக்குச் சென்று ஒரு குரங்கின் கைப்பட்ட இரண்டு பூனைகள்போல், நடுவிலிருக்கின்றவர்கள் கையிலகப்பட்டு, உண்ணச்சோறும், உடுக்கத் துணியுமில்லாது வருடக்கணக்காக நடக்கும் வழக்குகளில் வழக்கு நடந்துகொண்டிருக்குங் காலத்திலேயே பலர் இறந்தும், வழக்கு முடிந்தவுடன் உயிர்தப்பி நின்ற சிலர் அன்னிய அரசாங்கத்தாரால் ஆளப்படும் அயல் நாட்டுக்கு ஓடியும், தீவு தீவாந்தரங்களுக்கு ஓடியும் ஒழிந்துபோகின்றனர். எல்லாச் செல்வங்களும் நிறைந்து இயற்கையறிவையும் செயற்கையறிவையும்பெற்று ஞானத்திற்கே தலைநாடாய், இம்மை, மறுமை, வீடு என்கின்ற மூன்றையும் அடைய உரியதாய், பல மதங்களும், அம்மதங்களையுண்டாக்கிய ஆசிரியர்களும் எம்மதமும் தங்களுக்குச் சம்மதமே என்றும், எல்லாம் படிமுறையாக வருவது, எல்லா வுயிர்களும் ஒரு திறத்தனவாகிய உயிர்கள் என்று அன்புகொண்டு அருள்பூத்து, "இல்லறம் அல்லது நல்லறம் அன்று" என்னும் இல்லறத்தை நடத்தி நன்னிலையும் சைவமும் தழைத்த இந்நாட்டில் நம் இளைஞர் இவ்விதம் காலங்கழிப்பது தகுதி யாகுமோ? ஆதலால் இனியேனும் நம்மக்களை நன்னெறியில் செலுத்துவதற்குப் பண்டைக் காலத்தைப்போல் சமயத்தைப் போற்றி வாழ்கின்ற கல்வியையும், அறநெறியைப் போதிக்கின்ற கல்வியையும் பிழைக்கும் வழியையும் போதித்து, விதித்தன செய்து, விலக்கியன ஒழிவதற்கு வேண்டியதைக் கற்பித்து உழவுத் தொழிலையும் கைத்தொழிலையும் வாணிபத் தொழிலையும் வளர்த்து, ஆளும் அரசர்க்கு அன்பு பூண்டவர்களாக இருந்து, எந்நாளும் எக்காலத்தும் ஆண்டவனை மனத்தால் நினைத்து வாயால் வாழ்த்தி உடலால் வணங்கி வாழும்படி செய்தல் வேண்டும். இவற்றிற்கெல்லாம் முதலாகிய எல்லா மதங்களையும், படிமுறை என்று கொள்ளும் அகன்ற அறிவையும், எல்லா வுயிர்களையும் தம்முயிர்போல் பார்க்கும் அருளுடைமையும் கொண்டு தேவ தேவனாகிய மகாதேவன் என்னும் சிவபெருமானைத் தமக்குக் கடவுளாகக் கொண்டு, அவன் ஆண்டவன், நாம் அடிமைகள் என்னும் ஆண்டான் அடிமைத்திறங் கொண்டு நம்முடைய செய்கைகளால் கடவு

ளருக்குரியராகி, நாம் இறைவன் திருவடியை அடையச் செய்கின்ற மதமாகிய சைவசித்தாந்த மதத்தை உலகெங்கும் பரப்புதல் வேண்டும். இந்நெறி செய்தலே நன்னெறியாகும்.

இதுகாறும் கூறியவாற்ருல், நமது நாட்டு மக்கள் முற் காலத்தில் சமயக் கல்வியும் ஒழுக்க நூற் கல்வியும் தொழிற் கல்வியும் நன்கு பயின்று தங்கள் வாழ்க்கையைச் செவ்வையாய் நடத்தி வந்தார்களென்பதும், தற்காலத்தில் அவ்விதக் கல்வி முறைகளைக் கைவிட்டு, ஆங்கில நூற் கல்வியை மட்டுங் கற்று இந்திய நாட்டுக்குப் பொருந்தாத அவர்கள் நாகரிக முறையைப் பின்பற்றி ஒழுகுதலேயன்றி, அவர்களிடத்தி லுள்ள நற்குணங்களைக் கடைப்பிடியாது தங்களுக்கும் தங்கள் நாட்டுக்கும் பெருங்கேடு விளைத்துத் துன்புறுகிருர்கள் என்பதும், ஆதலால் இனி, உலக நாகரிகத்துக்கே வழி காட்டியாயிருக்கிற நமது தமிழ்க் கல்வியையும் சமயக் கல்வி யையும் பயிலுதல் நல்வாழ்க்கை வாழ்ந்து இம்மை மறுமைப் பயன்களையும் முடிவில் வீட்டின்பத்தையும் அடைதற்குச் சாதனமா மென்பதும் நன்கு புலனுகும்.

குறுந்தொகை

மூலமும் விளக்க உரையும்

[இலஞ்தையடிகள் வித்துவான் இரா. சிவ. சாம்பசிவன்]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

(முன் எச-ம் பக்கத்தொடர்ச்சி)

குறிஞ்சி

இரவுக் குறிக்கண் வந்து தலைவியுடன் கூடி நீங்கும் தலைவனைத் தோழி எதிர்ப்பட்டுக் களவொழுக்கம் தீர்ந்து வரைந்துகொள்ளு மாறு கூறியது.

கபிலர் பாடியது

18. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை யாகுமதி
யாரஃ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்
கிவளுயிர் தவச்சிறிது காமமோ பெரிதே.

என்பது இரவுக்குறிவந்து நீங்குந் தலைமகனைத் தோழி எதிர்ப் பட்டு வரைவு கடாயது.

பதவுரை :—வேரல் வேலி—மூங்கிலால் ஆக்கப்பட்ட வேலியை யுடைய, வேர்க் கோட் பலவின் சாரல் நாட—வேரிலே பழுத்த பழங்களையுடைய பலாமரங்கள் நிறைந்த மலைச்சாரலையுடைய குறிஞ்சிநிலத் தலைவனே, செவ்வியை யாகுமதி—நீ இக்கள வொழுக்கத்தை நீங்கிச் செம்மையான ஒழுக்கத்தை யுடையவனுவாயாக!, யார் அஃது அறிந்திசி னோரே—நீ இவ்வாறு களவொழுக்கத்து ஒழுகுவதால் தலை விக்கு உண்டாகும் தீமையை யாவரே அறிந்துள்ளார்? சாரல் சிறு கோட்டுப் பெரும் பழம் தூங்கியாங்கு—மலைச்சாரிலே, மரத்தின் சிறிய கிளையில் பெரிய பழம் தொங்கிக்கொண் டிருப்பதைப் போல, இவள் உயிர் தவச்சிறிது—இவளுடைய (தலைவி) உயிர் மிகவும் சிறிது; காமமோ பெரிதே—இவளுக் குண்டாயிருக்கும் காமநோயோ பொறுக்கலாற்ருத அவ் வளவு பெரிது. (ஆதலின் செயக் கடவதை அறிந்து செய்வா யாக.)

வேரல்—மூங்கில். கோள்—பழம். அஃது எனும் சுட்டு தலைவியின் துன்பநிலையைக் குறித்தது. கோடு+பழம்= கோட்டுப் பழம் — ஏழன் தொகை. நாட—அண்மைவிளி. மதி, முன்னிலை யசைச்சொல். தவ—உரிச்சொல்.

இறைச்சி

'வேரல் வேலி வேர்க்கோட் பலவின் சாரல்'—என்றது மூங்கி லால் ஆக்கப்பட்ட வேலியைக் காவலாக வுடைய வேரில் பழுக்கும் பலாப் பழத்தையுடைய மரங்கள் நிறைந்த சாரல் என்றமையால் அப் பழம் பெறற் கரிது என்றவாறு. அதுவேபோல் தலைவியும் காவல் மிக்க மனையிடத்து உள்ளாளாயினள். ஆதலின் எய்தற் கரியள்; ஆதலின் இரவில் வாரற்க. பகல் வருதலும் இயலாதாதலின் வரைந்து கொள்க என்பது குறிப்பு.

மேற்கோள் விளக்கம்

1. 'யாரஃதறிந்திசினோரே'
   (1) (தொல்- சொல். சூ 270 இளம்)
   (2) (தொல்- சொல். சூ 270 தெய்வ)
   (3) (தொல்- சொல். சூ 275 சேனு)
2. 'சிறு கோட்டுப் பெரும் பழந்தூங்கியாங்கவள்'
   —(நன்- மயிலை. பக். 213)
   —(நன்- சங்கா. பக். 221)
3. "வேரல்வேலி பெரிதே"—இது காதல் மிகுதி கூறியது)
   —(தொல்- களவி. பக். 536.)
4. "வேரல்வேலி ......பெரிதே"—"இஃது அடிகள் எல்லாம்

அளவடிகளாய் மறிந்து செல்லலின்றி நின்றவாறே நிற்றலால் நிலை மண்டல வாசிரியப்பா'' என்பதற்கு மேற்கோள்.

—யாப்பு. காரிகை. (குமாரசாமிப் புலவர்) (பக். 77)

5. …………மேற்படி……….யா. காரிகை. மாறன் பதிப்பு. (பக். 94,219)

6. (1) "வேரல்வேலி………பெரிதே"—'இதனுள் அடி யெதுகையும் பொழிப்பு மோனையும், ஒரூஉ எதுகையும், இணை முரணும் கடையிணை யெதுகையும் பின் முரணும் வந்தவாயினும் முதல் வந்ததனாற் பெயர் கொடுத்து அடியெதுகைச் செய்யுள் என்று வழங்கப்படும். —(யாப்பருங்கலம்—பக். 189)

"காமங் கைம்மிகிற் றாங்குதல் எளிதோ" —(நற். 39)

(2) இஃது எல்லா வடியு மொத்துச் சிறப்புடை நேர்த்தலை யான் வந்த நிலை மண்டல வாசிரியப்பா— (யாப்பருங்கலம் 261)

7. 'இவளுயிர் தவச் சிறிது காமமோ பெரிதே'—

"பெரிதே காமமென்னுயிர் தவச் சிறிது"—(கலித்—137—2)

ஈற்றடிக் கயலடியின் ஈற்றுச்சீர் 'தூங்கியாங்கு' என்பது, 'தூங்கியாங்கிவள்' எனச் சில பிரதிகளிலுள்ளது.

"வேர்க்கோட் பலவின்"—

"பலவின் வேர்க்கொண்டு தூங்குங் கொழுஞ்சுளைப் பெரும் பழம்" —(நற். 213)

"நீ யறிந்திலை" என்பாள். "யாரஃதறிந்திசினோர்" என்றது கருதத் தக்கது.

'சிறு கோட்டுப் பெரும் பழம்'—
'உயிர் தவச் சிறிது காமமோ பெரிதே' } இவை முரண் தொடைகள்.

இம்முரண் நயம் உணரத்தக்கது.

"வேரல்வேலி—காமமோ பெரிதே"—இச்செய்யுள் காதன் மிகுதி கூறியதற்கு மேற்கோள்—

(தோல். களவு. இளம்பூ. பக். 202)

(1) "வேரல்வேலி வேர்க்கோட் பலவின்………பெரிதே"
—நிலை மண்டலவாசிரியப்பாவிற்கு மேற்கோள்—

(இலக்கண விளக்கம்—பக். 740)

(2)—காம மிக வுரைத்தற்கு மேற்கோள்

—(இலக்கண விளக்கம்—பக். 454)

(3) "வேரல்வேலி—பெரிதே"—எல்லா வடியும் ஒத்து வருவதனை நிலை மண்டல ஆசிரியம் என்ப.

—(தோல். செய்யு. இளம்பூ. 402)

மேய்ப்பாடு—அணங்கு பற்றிய அச்சம்.
பயன்—வரைவு கடாதல்.

ஆராய்ச்சிப் பகுதி-Research

தனித் தமிழும் கலப்புத் தமிழும்

(மறைமலையடிகள் மகனார் வே. மாணிக்கவாசகம் எழுதியது.)

மக்கட் கூட்டத்தாரின் நாகரிகமெல்லாம், அவர் வழங்கும் மொழியினால் நன்றாயறியப்படும். நாகரிகமில்லாத மக்களின் மொழியானது நாளுக்கு நாள் உருமாறியும், மற்ற மொழிச்சொற்களோடு கலந்துங் கடைசியில் தானொரு மொழியென்றே நில்லாமல் மாய்ந்துபோகின்றது. இதற்குச் சான்றாக உலகமெங்குமுள்ள காட்டுமிராண்டிகளின் மொழிகள் காலந்தோறும் மாறி மாறி மாய்ந்து போதலை வெள்ளைக்கார அறிஞர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். ஆகவே, நிலையான நாகரிகமும், நிலையான வாழ்க்கையும், நாளுக்கு நாள் பெருகும் அறிவு விளக்கமும், அரிய முயற்சியும் உடைய மக்களிடத்தல்லாமல், மற்றவர் பால் ஒரு மொழி சிறந்து தூயதாய்த் தொடர்பாய் நடைபெறுதென்பது அறிவுடையார்க்கெல்லாம் உடன்பாடாகும். ஆதலால், நாகரிகமுடைய மக்கள் தமது மொழியை நன்கு பாதுகாத்து வளர்த்தலிற் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டுமென்பது சொல்லாமலே நன்கு விளங்கும். மக்களின் முயற்சியால் ஒரு மொழியானது உரம்பெற்று உயிர்ப்புடையதாய் வழங்குதல் போலவே, திருந்திய மொழிவழக்கினாலும், அம்மக்கள் உரம் பெற்று உயிர்ப்புடன் நடைபெறுவர். வலிமையிற் சிறந்த ஒருவனையும், அறிவில் மிக்க மற்றொருவனையும், நல்லியற்கை வாய்ந்த வேறொருவனையும், அவனவன் சொற்களினாலேயே நாம் அறிந்து கொள்ளலாம். அங்ஙனமே வலிமையில்லாத ஒருவனையும், அறிவு குறைந்த மற்றொருவனையும், தீயோனான வேறொருவனையும் அவனவன் சொற்களினாலேயே அறிந்து கொள்ளலாம். ஆகவே, ஒரு மொழி வழக்கிற்கு அம் மொழிக்குரிய மக்கள் இன்றியமையாதவரா யிருத்தல் போலவே, அம் மக்களின் நாகரீக வாழ்க்கைக்கும் அவர் தம் மொழி இன்றியமையாததாகு மென்பது பெறப்படும். மக்களை விட்டு மொழியும், மொழியை விட்டு மக்களும் உயிர் வாழ்தல் சிறிதும் இயலாது. "எனது விருப்பப்படிதான் யான் பேசும் மொழியைத் திரித்தும், அயல்மொழிச் சொற்களோடு கலந்து மாசு படுத்தியும் வழங்குவேன்; அம் மொழியின் அமைப்பின்படி யான் நடக்கக் கடவேனல்லேன்" என்று ஒவ்வொருவனுந் தனது மொழியைத் தன் விருப்பப்படியெல்லாந் திரித்துக் கொண்டு போவானாயின், சிறிது காலத்

தில் ஒரு மக்கட்கூட்டத்தாரிலேயே ஒருவரை யொருவர் அறிந்து கொள்ளமுடியாத வகையாய் ஒவ்வொரு சிறுகூட்டத்திற்கும் ஒவ்வொரு புதுமொழி காலந்தோறும் உண்டாகி அம்மக்களை ஒன்று சேரவிடாமல் அவர்களைப் பல சிறு கூட்டங்களாகப் பிரித்து விடும். முன்னொரு காலத்தில் இவ்விந்திய நாடெங்கும் பரவி யிருந்த தமிழும், தமிழ் மக்களும் இப்போது எத்தகைய நிலையிலிருக்கின்றனர் என்பதை நினைத்துப் பாருங்கள்! முற்காலத்தில் தமிழ் மொழி ஒன்றையே பேசிய தமிழ் மக்களின் தொகை ஆறு கோடியாகும். அப்பெருந் தொகையான மக்கள் இப்போது சிறு சிறு கூட்டத்தவராய்த் தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவு, தோடம், படகம், குடகம், உராவோன், எர்க்கலா, ஏனுதி, பிராகுயி, கோண்டம், பில்லம் முதலான பலவேறு மொழிகளைப் பேசுவாராய், ஒருவர் பேசுவதை ஒருவர் அறியாமல் விழிக்கும் நிலையில் இருப்பது எதனாலென்பதையும் நினைத்துப் பாருங்கள்! நாகரிகத்தாற் சிறந்த தமிழ், முன்னோர்கள் வழங்கிய செந்தமிழ் வழக்கிற்குச் சிறிதுங் கட்டுப்படாமல் தாந்தாம் விரும்பிய படியே தமிழ்ச்சொற்களைத் திரிபுபடுத்தியும், வடசொற்களை ஏராளமாகக் கலந்து மாசுபடுத்தியும் வந்த தமிழ் மக்களன்றோ இப்போது தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம் முதலான பலவேறு மொழிகளைப் பேசும் பலவேறு இனத்தவர்களாய் ஒருவரை யொருவர் அறியாமலும், ஒருவரோடொருவர் அளவளாவுதற் கில்லாமலும், ஆங்காங்குத் தன்னந்தனியராய்ச் சிறு சிறு கூட்டத்தவராய் ஆரியர்களுக்கு அடிமைகளாய் வாழ்நாட் கழிக்கின்றனர். ஆதலால், ஒரு மக்கட் கூட்டத்தார் தம்முட் பலவகையாய்ப் பிளவுபடாமல் ஒன்றுபட்டிருந்து நன்கு உயிர்வாழ்வதற்கு அவர்கள் தமக்குரிய மொழியைத் திரிபு படுத்தாமலும், அதில் அயல் மொழிச் சொற்களைக் கலவாமலும் மிகவும் கருத்தாக அதனைப் பாதுகாக்க வேண்டுமென்பது புலனாகும்.

இனி, ஆங்கிலமொழியை எடுத்துக்காட்டி, அதிற் பலவேறு மொழிகள் கலந்திருப்பதே அதனுடைய வளர்ச்சிக்கும் பரவுதலுக்குங் காரணம் என்பர் சிலர். ஆனால், ஆங்கில மொழியின் வரலாற்றை அவர்கள் செவ்வையாக அறிந்துதான் பேசுகின்றார்களோ என்பது எனக்கு ஐயமாயிருக்கின்றது. ஆங்கிலமானது சொல்வள மில்லாத ஏழை மொழி; பழைய நாளில் நாகரிகமில்லாத ஒரு சிறு கூட்டத்தவராற் பேசப்பட்ட மொழி; காலங்கடோறும் பிற நாடுகளிலிருந்து வந்த முரடர்களான வேறு வேறு மக்களால் அலைப்புண்டு, அவர்கள் கொண்டுவந்த பலவேறு மொழிகளாற் கலப்புண்டு தன் தாய்

ண்மையிழந்தமொழி; காலங்கடோறும் மாறிக்கொண்டு வந்த மொழி. இதனைப் பேசும் மக்கள் அறிவிலும், முயற்சியிலும் மேம்பட்டு நாகரிகத்திற் சிறந்து வாழ்ந்து வழங்கிய பின்னரே, தமது மொழியை இனித் திரிந்து போகவிட்டால் தமது வாழ்க்கை நிலையாது என நன்குணர்ந்து, அதற்கு இலக்கண இலக்கிய வரம்பு கோலி அதனைக் கண்ணுங்கருத்துமாய்ப் பாது காத்து வருகின்றார்கள். ஆசிரியர் 'பேயின்' 'மிக்கிள் ஜான்' முதலானவர்கள், தமது ஆங்கில மொழியைத் தூயதாகப் பிறமொழிச் சொற்கள் கலவாமல் எவ்வளவு அதனைப் பாது காத்து வழங்கக் கூடுமோ, அவ்வளவுஞ் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி எழுதியிருக்கின்றார்கள். இன்றைக்கு ஐந்நூறாண்டுகட்கு முன்னிருந்த ஆங்கில மொழியும், இன்றைக்கு முந்நூறாண்டுகட்கு முன்னிருந்த ஆங்கில மொழியும் வெவ்வேறு மொழிகள் போல் மாறிவிட்டமையால், அக் காலத்தில் எழுதப்பட்ட நூல்களை இப்போது ஆங்கிலம் பயிலு கின்றவர்கள் தெரிந்துகொள்ள முடியாதவர்களா யிருக் கின்றார்கள். 'சாசர்' எழுதிய நூல்களையும், 'ஷேக்ஸ்பியர்' எழுதிய நூல்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும். ஆங்கில மொழி அத்தகையதாயிருக்க, அதனொடு தமிழை ஒப்பிட வந்த அவர்கள், தமிழின் வர லாறும், அதன் வழக்கும் எவ்வளவு ஆராய்ந்திருக்கின்றார்க ளென்பது, அவர்கள் சொற்களிலிருந்து விளங்கவில்லை. ஆனாலும், எனக்குத் தெரிந்தமட்டில் எழுதுகிறேன்.

தமிழின் வரலாற்றையும், வழக்கையும் விரிவாகத் தெரிய வேண்டினால், என் அருமைத் தந்தையார் மறைமலையடி கள் எழுதியிருக்கும் நூல்களைப் பார்க்கும்படி வேண்டு கின்றேன். தமிழானது மிகுந்த சொல்வளமுடையது. தமி ழையும், பிறமொழிகளையும் நடுவு நின்று நன்கு ஆராய்ந்த 'கால்டுவேல்' முதலான மேனாட்டாசிரியர்கள், தமிழானது பிறமொழிகளின் உதவியைச் சிறிதும் வேண்டாமல் எல்லாத் துறைகளிலும் தனித்தியங்கவல்லது என்றும், ஆங்கிலம் முத லான மற்றமொழிகளோ பிற மொழிகளின் உதவியை வேண் டாமல் தனித்தியங்க மாட்டாதனவென்றும், தமிழானது பிறமொழிக் கலப்பின்றித் தூயதாக எழுதப்படும்போதும், பேசப்படும்போதும் மிக்க அழகுடையதாய்ப் பிறருள் ளத்தைக் கவருந்தன்மையதாய் விளங்குகின்றதென்றும் வலி யுறுத்திச் சொல்லியிருக்கின்றார்கள். அவர்கள் சொல்லிய அவ்வுண்மை எல்லாப் பொருள்களையும் தனித்தமிழில் எடுத்துரைக்குந் "திருக்குறள்" என்னும் ஒரு நூலைப் பார்த் தாலும் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். அதுவும் போதா

தேல், திருக்குறளின் காலத்தும் அதற்கு முற்பட்ட காலத்தும், இயற்றப்பட்ட பழைய செந்தமிழ் நூல்களைப் பார்த்தால் தமிழின் சொல்வளம், பொருள்வளம் நன்கு விளங்கும். இவ்வளவு சிறந்த தமிழ் மொழியைப் பேசிய பழைய தமிழ் மக்கள் எவ்வளவு சிறந்த நாகரிகம் வாய்ந்தவர்களாயும், பிறமொழியாளர்களுக்கும், அவர்களுடைய சொற்களுக்கும் அடிமைப்படாத எவ்வளவு தனிப்பெருஞ் சிறப்பு உடையவர்களாயும் இருந்திருக்க வேண்டும்! இத்தகைய தமிழரையும் இத்தகைய தமிழ் மொழியையும், ஆங்கில மொழிக்கும், ஆங்கில மக்களுக்கும் ஒப்பிடுவது எவ்வளவு பொருந்தாததாயிருக்கின்றது!

(தொடரும்)　　—ம. விடுதலை.

பொய்யாமொழிப் புலவர்

(1) பொய்யா மொழிப்புலவர் தொண்டை மண்டலத்தில் செங்காட்டங்கோட்டத் துறையூரில் சைவவேளாளர் மரபில் உதித்தவர். இம் மரபினரே அந்தகக்கவி வீரராகவ முதலியாரும், கவிவீரராகவ முதலியாரும், அட்டாவதானி சொக்கப்ப நாவலரும் பிறரும் ஆவர். இவருள் சொக்கப்ப நாவலர் 17-ம் நூற்றுண்டின் இடையில் சேலம் கணக்கத் தெருவில் வாசம் செய்து தஞ்சைவாணன் கோவை உரையும் சேலம் ஸ்தலபுராணமும் சுகவனநாதர் தோத்திரப்பிரபந்தங்களும் இயற்றினர். நாவலர் பரம்பரையில் வந்தவர்கள் சேலம் வக்கீல் சுப்பராய முதலியாரும் இவரது புத்திரர் கனகசபாபதி முதலியாரும் (M. A., B. L., மிட்டாதார்) ஆவார். தொண்டை மண்டலத்து வேளாளர்கள் விஜயநகரவரசர் காலத்தில் முன்னர்க் குறித்த நூற்றுண்டில் தாரமங்கலம் முதலிய இடங்களில் பிரதி காவலராக இருந்து பல சிவாலயங்களையும் கட்டுவித்தமை துருக்கங்களாலும் சாஸனங்களாலும் விளங்கும்.

(2) பொய்யாமொழிப்புலவர் இயற்றிய நூல் தஞ்சைவாணன் கோவை. இக் கோவைக்குப் பாட்டுடைத் தலைவர் சந்திரவாணபூபதி. இப்பூபதி மாறை நாட்டை யாண்ட கோமாறவர்மர் திரிபுவனச்சக்கரவர்த்தி குலசேகரதேவருக்கு மந்திரியாய் இருந்தவர். மாறைநாடாவது தென் பாண்டிநாட்டில் கொற்கை வல்லம் தஞ்சாக்கூர் மல்லை என்னும் நான்கூருக்கும் இடைப்பட்டுப் பொருநையாற்றங் கரை

யில் உள்ள நாடு. மாபலிவாண கோவரையர் என்பார் 8-ம் நூற்றாண்டு வரை வட தேசத்திலும் தொண்டை நாட்டிலும் சிறப்புடன் அரசியல் ஓச்சி, 12, 13,-ம் நூற்றாண்டில் மாறை நாட்டில் பாண்டியருடைய பட்டந்தரித்துச் செந்தமிழ் நாட்டையும் செந்தமிழையும் போற்றிவந்தனர் என்பதை ஸ்ரீவில்லிபுத்தூர்ச் சாஸனங்களாலும் ரைஸ், போக்ஸ் என்ற ஆங்கில அறிஞர்கள் எழுதிய நூல்களாலும் அறியலாம். இக் கோமாறவர்மர் சோழநாட்டில் கடற்கரைப் பட்டினங்களையும், சேரநாட்டில் சேரர்களோடு மல்லைவல்லங்களில் பொருது அந் நாட்டுச் சில பகுதியையும் கைப்பற்றினர் என்பது பல சாஸனங்களால் விளங்கும். இம் மாறவர்மர் தாம் புலவராய் இருந்து சில நூல் வரைந்ததும் அன்றிப் பொய்யாமொழியாரையும் நாற்கவிராஜ நம்பியாரையுங் கொண்டு, கோவையையும் அகப்பொருள் விளக்கத்தையும் எழுதுவித்தும் உள்ளார். வஞ்சிப் பொய்யா மொழியார் இவர் எனத் துணிதற்கு இடமில்லை.

(3) பொய்யா மொழிப் புலவர் இயற்றிய தனிப் பாடல்களால் தஞ்சாவூர் முதலிய நகரங்களும் ராஜேந்திர சோழருள் அப்பேர் வாய்ந்த ஒருவரும் குல சேகரபாண்டியருள் அப்பேர் வாய்ந்த கோமாறவர்மரும் பாடப்பட்டார் என்பது விளங்கும். இவரியற்றிய பாடல்களைக் கொண்டு இதுகாறும் பெரியோர்கள் இவரைப்பற்றிக் கூறும் விருத்தாந்தங்கள் காளிங்கராயன் குதிரையை மாளவும் மீளவும் பாடியதும், கோழியைப் பாடிய வாயால் குஞ்சைப் பாடேனென்றதும், கலைந்த சங்கத்தைக் கூட்ட மதுரைக் கெழுந்ததும், காளைக்குமாரன் கவிகேட்கத் தனிவழி வந்ததும், காளையார் கோவில்கூத்தாள் முதலியோர்க்குக் கண்வரப் பாடியதும், தஞ்சைவாணன்மீது கோவைபாடிப் பொற்றேங்காய் பரிசு பெற்றதும், மதுரை சென்று மாறனைக் கண்டு பாடியதும், பழய குருடி கதவு திறடி எனப் பாடியதும், சோழ நாடு புகுந்து செல்வர் சீநக்கனைப் பாடியதும், கண்டியூர் வண்ணத்தியைப் புகழ்ந்து பாடியதும், புலையன்உடல் வெடிக்கப் பாடியதும், அவவாதத்திற் கஞ்சி இரங்கியதும், சிதைவிலகப் பாடித் தீப்பாய்ந்ததும் பிறவுமாம். இவ் விருத்தாந்தங்களை மண்டல சதகங்களாலும் தமிழ்நாவலர் சரிதத்தாலும் தனிப்பாடற் றிரட்டாலும் விநோதரசமஞ்சரியாலும் முருகர் பிள்ளைத்தமிழ், திருப்புகழ், நன்னூற் புத்துரை என்பவற்றாலும் சத்தியவாக்கியின் சரித்திரபுத்தகங்களாலும் அறிந்து கொள்ளலாம்.

அறிவியற் பகுதி - Science

ஞாலநூல் (Geology)

[திரு. S. நடராஜன் அவர்கள் B. A.]

(௫௩-ம் பக்கத் தொடர்ச்சி)

6. உயிர் இனங்கள் நேர்முகமாயும் மறைமுகமாயும் ஞாலத்தின் மேற்பரப்பை மாற்றுகின்றன. அழுகின செடி, இலை, வேர், பூண்டு முதலியவை படை படையாய் சேர்ந்து நிலப்பரப்பை உயர்த்துகின்றன*. கடல் வாழ் உயிர்களின் எலும்புகளும், சிப்பிகளும் சேர்ந்து புதுத்தீவுகள் ஆகிவிடுகின்றன. தென்கடலில் இம்மாதிரித் தீவுகள் பல உள. இவைகளைப் பவளத்தீவு (Coral reefs) என்பர். இது நேர்முகமாய் செடி கொடி உயிர் இனங்கள் ஞாலத்தின் மேற்பரப்பில் மாறுதல்களை விளைப்பனவாம். மலைமேலும் மணற்குன்றுகள் மேலும் புல் பூண்டு செடி கொடி மரங்கள் தோன்றி அரண் போல் விளங்கி நீராலும் காற்றாலும் அழிந்து சிதையாமல் காப்பது மறைமுகமான பணியாகும். பட்டு விழுந்து நிலப்பரப்பை உயர்த்தும் மரஞ்செடி கொடிகள் எவ்வாறு நிலக்கரியாய் மாறுகின்றன என்பதைப் பின்னர்க் கூறுவாம். ஈண்டு மரஞ்செடி கொடிகளும் நிலப்பரப்பை உயர்த்துகின்றன என்பது அறியத்தக்கது.

தாவரம் ஒழிந்த ஏனைய கடலிலும் நிலத்திலும் வாழும் உயிரினங்கள் அவை அவைகளின் எச்சத்தாலும், இறந்த பின்னர் எலும்புக் கூடுகளாலும் ஞாலத்தின் பரப்பை மாற்றுகின்றன. தென்கடலில் புதிது புதிதாகத் தோன்றி ஒன்றுடன் ஒன்று இணைக்கப்படும் பவளத்தீவுகளைப்பற்றி முன்னரே குறிப்பிட்டோம். விலங்குகளின் எலும்புகளும் பறவைகளின் எலும்புக் கூடுகளும் ஏரி மணலின் அடியில் புதையுண்டு கிடக்கின்றன. இப்புதை பொருள்கள் ஞால நூல் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் துணையாகின்றன.

---

* The growth and decay of Vegetables are yearly adding to the soil, at the same time that they protect the surface from the wasting action rain, frost and the like.

—*David Page*

Advanced text of Book of Geology.

152

7. தாதுப் பொருள் அல்லது பூதப் பொருள்களால் ஏற்படும் மாறுதல்கள் புலன்கட்கு எளிதில் தோன்றுவன வல்ல. பாறைகளின் உட்படை சுருங்குவதும், உலோகங்கள் உற்பத்தியாவதும் தாதுப் பொருள்களின் செயலாலேயாம். கடற்கரை ஓரங்களிலும் தட்டையான உப்புநீர் ஏரிகளின் கரை ஓரங்களிலும் படிந்து கிடக்கும், உப்பு, வெடியுப்பு, பொட்டிலுப்புப் படைகளும் ஞாலத்தின் மேற்பரப்பில் மாறுதல்களை உண்டாக்குகின்றன.

8. ஞாலத்தின் மேற்பரப்பில் ஏற்படும் மாறுதல்களுக்கு எரிமலை ஒரு சிறப்பான காரணம். மழை, ஆறு, கடல் வழியாக நீர் மேட்டு நிலத்தைச் சமதளமாகச் செய்கிறது எனக் கூறினேமல்லவா? இவ்வாறு செய்துவரும் நீரின் வேலைக்கு எதிர்மறையாக எரிமலைகள் வேலை செய்கின்றன. இவைகள் நிலப்பரப்பை மேலே கிளம்பச் செய்து மலைகளை தோற்றுவிக்கின்றன. நீர் சமதளமாக்குகின்றது. நெருப்பு மலைகளைப் புதுப்பித்து மேட்டு நிலத்தை உண்டாக்குகின்றது. மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத மலைகளும், மேட்டு நிலங்களும், பள்ளத்தாக்குகளும் எரிமலையால் உண்டாகின்றன*. எரிமலை, மண்கம்பம், மேற்பரப்பின் மெல்லிய அசைவு, ஆய மூன்று சிறப்பியல்புகளாலும் சிதைவுறும் நிலப்பரப்பு மறுபடியும் உண்டாக்கப் படுகிறது. இம்மூன்று சக்தியும் இயற்கையால் ஞாலத்திற்கு இல்லாதொழியுமேல் நிலப்பரப்பே இல்லாது போகும்.

உ. ஞாலத்தின் வயிற்றில் இருக்கும் நெருப்பின்சக்தியால் மூட்டப்பட்டு நிலப்பரப்பு மேலே உயர்ந்து மலைகளாயும் தொடர்மலைகளாயும் ஆகியுள்ளன. சில இடங்களில் மலையின் வாய்பிளந்து நெருப்புக் குழம்புகளும், பாறைத்துண்டுகளும், தூசிகளும், சுடு மண்களும், சாம்பரும், பலவித நெருப்புசம்பந்தமான வாயுக்களும் வெளியே வருவதுண்டு. வெளியில் வழிந்த நெருப்புக்குழம்பு குளிர்ந்தபின்னர் பாறைகளாகின்றன. இவ் எரிமலைகள் கக்கும் கனற்குழம்பு படைபடையாய்ச் சேர்ந்து குடைபோன்ற மலைகளாய் மாறும். வரலாற்றுக் காலத்துக்குள் இவ்வாறு பல புது மலைகள்

---

* As the one from without tends to degrade and wear down, so the other within tends to elevate and reconstruct; and through the force exerted by either may vary at different Epochs, still the general result is the maintenance of a habitable terraqueous surface.

—*David Page*

உண்டாயதற்குச் சான்றுகள் பல உள. நிலப்பரப்பில் எரிமலைகள் கனற் குழம்புகளைக் கக்குவதுபோல் கடலிலும் தரையிலிருந்து எரிமலை கனற்குழம்புகளைக் கக்கும். ஆண்டு வழியும் தீக்குழம்பானது நீரினுள்ளே பாறைகளாய் மாறுகின்றது. எரிமலையின் கக்கு வாயினின்றும் வழியும் அனற்குழம்பு குளிரும் கால அளவையால் பலவிதமான பாறைகள் உண்டாகின்றன. சில இடங்களில் வெந்நீர் ஊற்றுக்களும் கந்தகக் கக்குவாய்களும் இதனால் ஏற்படுகின்றன.

(ங) மண்கம்ப அதிர்ச்சியினால் மலைகளின் உயரம் அதிகரிக்கின்றது; நிலத்தின் மேற்பரப்பு பிளவுபடுகின்றது. சிற்சில பாகம் கடல்வாய்ப் படுகின்றது. புதுநிலம் தோன்றுகின்றது. கடலில் பெரும் கொந்தளிப்புகள் ஏற்படுகின்றது. நீரின் அழித்தல் வேலைக்குப் புறநடையாக மண் கம்ப அதிர்ச்சிகள் நிலப்பரப்பை உயர்த்தி மாறுதல்கள் உண்டாக்குகின்றன.

(ச) மேற்பரப்பின் மெல்லிய அசைவுகளால் நிலப்பரப்பு சிலபல இடங்களில் மேல்நோக்கிக் கிளம்புகின்றது.

9. இதுகாறும் கூறியவாற்றால் பெறப்படுவது யாதெனின் நீர், தீ, வளி என்ற முப்பெரும் பூதங்களும் ஞாலத்தின் மேற்பரப்பில் தனித்தனியாயும், ஒன்று சேர்ந்தும் பலபல மாறுதல்களை உண்டாக்குகின்றன. இம்மாறுதல்களானவை தொன்றுதொட்டே இடைவிடாது நடை முறையிலே இருந்து வருகின்றன. இம்மாறுதல்கள் ஓய்வின்றி இன்றும் நடைபெறுகின்றன; என்றும் நடைபெறும். மழையும், பனியும், காற்றும், இறுகிய நிலப்பரப்பைத் தேய்த்துக் குறைக்கின்றன. சிற்றாறுகளும், பெரிய நதிகளும், தாங்கள் செல்லும் வழிக்காக நிலத்தை அறுத்து மலையைக் குடைந்து கற்களை மணலாக்கி ஏரிகளிலும் கடல்களிலும் தூவி அடுக்கு வரிசையாகப் படை படையாய்ச் சேர்க்கின்றன. இப்படைகளின் இடையே பல உயிர் இனங்களின் எலும்புக் கூடுகளும் செடி கொடிகளும் அகப்பட்டு ஞால நூலாசிரியர்களுக்குப் பெரிதும் துணைபுரிகின்றன. புல் பூண்டுகளின் அழுகிய குப்பைகள் நிலக்கரியாக மாறுகின்றன. எரிமலைகளின் சக்தி நிலப்பரப்பின் சில பகுதியை உயர்த்தியும் சில பகுதியைக் கடலினுள் தாழ்த்தியும், சில இடங்களில் கக்கு வாய்களின் மூலம் நெருப்புக்குழம்புகள், தூசி, சாம்பர்களைக் கக்கி வழிந்து ஓடச்செய்து மலைகளை உண்டாக்குகின்றன. பண்டையிலும் எரிமலைகள் இவ்வாறு புது மலைகளை உண்

டாக்கி நிலப்பரப்பில் பல மாறுதல்களைச் செய்துள்ளன. பலவகைப் பாறைகள் தோன்றுவதற்கு எரிமலைகள் காரணமாம்.

(10) இயற்கை யென்னும் காலனின் ஏவலாளர்கள் இடைவிடாது ஓய்வின்றி ஞாலத்தின் மேற்பரப்பில் மாறுதல்களை உண்டாக்கிக்கொண்டு வருகின்றனர். புதுப் புதுப் பாறைகளின் தோற்றமும் புதுமலைகளின் அடுக்கு வரிசைகளும் இயற்கையின் எல்லையற்ற திறனை எடுத்துக்காட்டுகின்றன. இவ்வியற்கையின் நுட்பங்களை உணர்ந்தார் யாரே "மண்ணையும், புனலையும், வளியையும், கனலையும், விண்ணையும் படைத்த வித்திலாவித்தை"* ஏற்றிப் பணியாதார்!

வடிவு திருந்த அறிவு வளர்ந்த வகை

[திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள்—
திரு. க. ப. சந்தோஷமவர்கள்]

மரங்கள் தலையை நிலத்திலூன்றிப் புணர்ச்சிக் கருவிகளை எவருங்காண வெளியே வைத்திருக்கின்றனவென்று பார்த்தோம். மரங்களை விட்டு விலங்குகளுக்குச் செல்லுங்கால் இவை தம் புணர்ச்சிக் கருவிகளை வால்கொண்டு மறைக்கின்றனவென்று காண்கின்றோம். இயற்கை உணர்ச்சியாலுந்தப்பட்டு இங்ஙனம் புணர்ச்சி உறுப்புக்களை மறைக்க முயல்வதற்கேற்ப உயிர்களின் அறிவு முதிர்ந்திருக்கின்றது. இதற்கிசைய உடலுந் தலையும் பொருந்துகின்ற முடக்கியும் வேறுபடுகின்றது. முதன்முதல் வையகத்தில் தோன்றிய மக்கள் தம் புணர்ச்சி உறுப்புக்களை இலைகளால் மூடிக்கொண்டார்களென் றறிகின்றோம். மக்களின் அறிவுயர்ச்சிக்கிதுவே சான்றாகும். நாட்டுப்புறங்களில் வாழுகின்ற மக்களிற் சிலர் இந்நாளிலும், மரம் எங்ஙனந் தலையை மறைத்துக்கொண்டு உடலை எவருங்காண வெளியில் வைத்துக்கொண்டிருக்கின்றதோ, அவ்வாறே செய்கின்றார். அவர்கள் தங்கள் மண்டையில் ஒரு தலைப்பாகையைச் சுற்றி மறைத்து, உடலை எவருங் காண வெறுமையாக வைத்திருக்கின்றனர். உயிர்களின்கீழ் நிலையில் புதையுண்டிருக்குந் தலை சிறிது சிறிதாக நிமிர்ந்து மக்கள் நிலையில் செங்குத்தாக மேலே அமரும்பொழுது உடல் முழுவதையும் மறைத்துத் தலையை வெறுமையாய்

---

* தாயுமானசுவாமிகள் மாணுக்கர் அருளிய அகவல்.

விடவேண்டுமென்கின்ற ஒருணர்ச்சி யுண்டாகின்றது. இது நாகரிக முதிர்ச்சி.

என் நண்பரொருவர் சில நாட்களுக்குமுன் நிகழ்த்திய சொற்பொழிவொன்றில், இந்திய மகளிர் காலை மூடுவதற்கு ஒன்றும் அணியா திருப்பதைப் பார்த்தால் ஐரோப்பிய மகளிர் அருவருப்புக் கொள்வார்கள் என்று சொன்னபின், ஐரோப்பிய நங்கையர் அப்படி நினைப்பது தவறென்றும், அவர்கள் (ஐரோப்பிய நங்கையர்) ஆண்களோடு சேர்ந்து கூத்தியற்றுகையில் அணிந்து கொள்ளும் உடையைக்கண்டு இந்திய மகளிர் பெரிதும் வெறுப்புறுவார்க ளென்றும் மொழிந்தார். மரஞ் செடி கொடிகளிலிருந்து முதன் முதல் வையகத்தில் தோன்றிய மக்கள் வரையிலும், முதன் முதற் றோன்றிய மக்களிலிருந்து இக்காலத்திய நாகரிகமடைந்த மக்கள்வரையிலுஞ் சென்று ஆராய்ந்து, தலையைவிட உடலை மூடுவதே இயற்கையான நெறியென்றும், நாகரிகமடைந்த பெண்கள் உடல் முழுவதையும் மூடித் தலையை மறையாமல் விடுவதே ஒழுங்கென்றுங் காட்டமுயன்றேன். இதுவே இயற்கை நெறியின் முடிவாகும். ஆதலின், கால்கள் மூடப் படாமலிருப்பதைக் குற்றமென்று நினைப்பது இயற்கைக்கு முரண்பட்டதாகு மென்று யான் கருதவில்லை. கால்களை மூடுவது இயற்கையில் நாம் காணும் நாணுடைமை நெறியைப் பின்பற்றியதேயாகும்.

இதுபோன்றவையும் இதனினுந் தலையாயனவு மாகிய பலபகுதிகள் இதுபற்றிச் சொல்லுதற்குள. ஆனாலிவற்றை வெளியிடுதற்கேற்ற மன்று இஃதாகாது. அறிஞர் சிலரே இதற்குரியராவர். இதன் காரணம் முன்னரே என்னால் எடுத்துக்கூறப்பட்டது. இன்று யான், படிப்படியாக அறிவும் வடிவும் ஒன்றிற்கொன்றிசைந்து வளர்ச்சிபெற்ற வரலாற்றை முடிக்கக் கடமைப்பட் டிருக்கின்றேன். இச்சொற்பொழிவுகளை யான் நிகழ்த்துவதன் கருத்து யாதென்பது பற்றி இதற்குமுன் ஒன்றும் யான் கூறவில்லை. இன்றோடு சொற்பொழிவு முடிவு பெறப் போவதால் யான் கொண்ட நோக்கத்தைக் குறித்துச் சில கூறுகின்றேன்.

உங்களிற் சிலர், உயிரின் வளர்ச்சியைப்பற்றி யான் இதுகாறும் கூறியவை எனது மூளையிலிருந்தே கிளம்பியவை என்று நினைத்திருக்கலாம்!; என்னைப் போல் இத்துறையிற் கருத்தைச் செலுத்தக் கூடிய சிலர் யான் கூறியவற்றை மகிழ்ந்துகேட்டு 'இது நன்று' என்றெண்ணியிருக்கலாம்;

வேறு சிலர் வேறு கருத்துடையவர்களாகவு மிருக்கலாம். இப்பொழுது யான் கூறுகின்றது யாதெனின், இது பற்றி வரக்கூடிய புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் யான் உரியவனல்லன் என்பதே. ஈண்டு யான் எடுத்துக் கூறியவையெல்லாம் சைவ சித்தாந்தக் கொள்கையினின்றும் பெறப்பட்டன. எடுத்துக் கொண்ட இப்பொருளை, மேல்நாட்டார் வழக்கைப் பின்பற்றி, யாவரும் மெய்ப்பித்துப் பார்க்கக்கூடிய கணக்குகளோடுங் காட்டுகளோடுங் கூறியிருக்கின்றேன். மொத்தமாய் எனது கருத்தைச் சொல்லவேண்டுமாயின், டார்வின் என்ற அறிஞரால் 19-ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட உயிர் வளர்ச்சி வகை (Evolution) சைவசித்தாந்தக்கொள்கையின் ஒரு பகுதியே யாகும். உயிர் வளரும் வகையைப்பற்றி ஈண்டு யான் மொழிந்த சில உண்மைகள் மேலைநாட்டு அறிவியலாரால் இன்றளவும் ஆராயப்படவில்லை. சிறப்பாக, யான் கூறிவந்த அறிவிற்கும் வடிவிற்குமுள்ள இயைபு அவர்களுடைய ஆய்விற்குட்படவில்லை. யான்கூறு மிதுகேட்டவர்கள் நகினும் நகுவர். நிற்க.

தமிழ்த் தொல்லறிஞர் மிகமிக நீண்டகாலத்திற்கு முன்னரே ஒவ்வொரு வடிவிற்கும் ஒவ்வொரு பொருளுண்டு என்ற முடிவிற்கு வந்தார்கள். ஒருருவத்திற்கும் அது குறிக்கும் பொருளுக்குமுள்ள பொருத்தம் வழக்குப்பற்றி வருவதன்று, இயற்கையிலேயே அமைந்து கிடக்கின்றதென்ற கொள்கையுடையவர்களாயும் அவர்க ளிருந்தார்கள். பண்டைத் தமிழருடைய உண்மை இயல், நாம் காண்பனவுங் காணக் கூடியனவுமாகிய உருவங்களும், கேட்பனவும் கேட்கக் கூடியனவுமாகிய ஒலிகளும், தம்மில் தாமே பொருளுடையனவாய் மிளிர்கின்றன என்ற தகர்க்கொணாத அடிப்படையின்மேல் கட்டப்பட்டுளது. இவ்வடிப்படை தவறுமாயின் அவர்களுடைய உண்மை இயல் முழுவதும் பிழைபடும். யான் உங்கள்முன் கூறிவந்தவை யெல்லாம் தமிழரின் உண்மை இயலையும் மறைமொழிகளையும் எடுத்துரைக்கும் நூல்களிலிருந்து திரட்டப்பட்டவையே. ஈண்டுக் கூறியவாறே இவை ஆண்டுக் காணக்கிடக்கின்றனவல்ல. மேலை நாட்டு முறையில் நினைவைச் செலுத்துகின்றவர்கள் எளிதில் இவற்றை அறிந்து கொள்ளும் வகையில் தமிழ் உண்மை இயலை உங்களுக் கெடுத்துக்கூற முயன்றிருக்கின்றேன்.

டார்வின் என்பவர் தோன்றுவதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, உயிரின் வளர்ச்சியைக் குறித்துத் தமிழர்கள் நன்கறிந்திருந்தனர். டார்வின் தோன்றி ஒன்

றரை நூற்றாண்டுதானுங் கழியவில்லை. தமிழரின் கடைச் சங்கமிருந்த காலம் முப்பதுநூற்றாண்டு அல்லது குறைந்தது இருபது நூற்றாண்டுக்கு முற்பட்டதாகும். டார்வினுக்கு முன் மேல்நாட்டார் உயிர்வளர்ச்சியைப் பற்றி ஒன்றுமறியாதிருந்தனர். நமது பழைய ஏட்டுச் சுவடிகளில் அவர்களறியாதிருந்த உண்மைகள் மறைந்து கிடந்தன.

மக்கள் எங்ஙனந் தோன்றினார்கள் என்பது பற்றிய பல கொள்கைகள் வெளிவந்திருக்கின்றன. ஆனால், மக்களுக்கு மேற்பட்ட நிலையைப்பற்றி மேல்நாட்டார் ஒன்றும் நவின்றிலர். இது புனைதல் (Imagination) என்னும் ஆற்றலின் பாற் படுவதாகும். இத் துறையில் வகுக்கப்படுவனவற்றை மெய்யென்றும் பொய்யென்றுங் கூற வியலாது. யான் புனையும் ஒன்று எனக்குத் திருத்தமானதாகவே தோன்றுகின்றது. அது தவறென்று மற்றொருவர் கூற உரிமையில்லை.

மக்களுக்குக் கைகள் இரண்டு உள. கைகளில் ஆட்காட்டி விரலுக்கும் பெருவிரலுக்கும் நடுவே விரிந்த இடையொன்றுளது. இது விலங்குகளில் அத்துணை நன்றாகத் தோன்றுவதில்லை. கோழியை எடுத்துக் கொள்வோமாயின், பெருவிரலைபொத்த விரல் அதற்கும் ஒன்றுண்டு. ஆனால், அது பிரிந்து நிற்கின்றதே யொழிய மக்களுடைய பெருவிரலைப்போல் விரிந்த இடைவெளியோடு விளங்கவில்லை. இந்நாளில் ஏறிச்செல்வதற்குரிய பொறியூர்திகள் மிகுந்து வருவதால் மக்களுடைய கால்களுக்கேற்ற பயிற்சி யில்லாமற் போகின்றது. சென்னைக் கடற்கரையில் வேலைசெய்கின்ற வலைஞர் சிலரை யான் கவனித்தபொழுது, அவர்களுடைய விரல்களுக் கிடையே, வாத்தின் விரல்களுக்கிடையேயுள்ள சவ்வைப்போன்ற ஒரு வளர்ச்சி இருப்பதைக் கண்டேன். கடல் நீரில் அவர்கள் பெரும்பாலும் நீந்துவதால் இம் மாறுதல் தோன்றி யிருக்கின்றது. கருத்தின்றிப் பார்ப்பவர்களுக்கு அவர்களுடைய விரல்கள் நீளக் குறைவுடையவை போலத் தெரியலாம். அஃதுண்மையன்று. இடையே வளர்ந்திருக்குந் தோலால் அவர்களுடைய விரல்கள் நீளத்திற் குறைந்து தோன்றுகின்றன. இதிலிருந்து, மக்கள் செய்யுந் தொழிலுக்கேற்ப அவர்களுடைய உருவம் மாறுதலடையுமென்பது வெளியாகின்றது. தொழிலுக்கேற்ற வண்ணம், உருவம் மாறுதலடையுமாயின், அதனால் மக்களுடைய கைகளில் நிகழக் கூடிய வேற்றுமையைத் தெற்றெனக் காணப் பல்லாயிர மாண்டுகள் செல்லும்.

பெருவிரலோடு ஆட்காட்டிவிரல் சேர்வதால் யாதாயினு மொன்றை நாம் இறுகப் பற்றிக் கொள்ளக்கூடியவர்களா யிருக்கிறோம். பெருவிரலுக்கும் ஆட்காட்டிவிரலுக்குமிடையே ஒரு கத்திகொண்டு கீறிடின், முன்னங்கை முழுவதையும் இருபிரிவாகப் பிளந்திடலாம். முன்னங்கையில் அமைந் திருக்கும் இரண்டு எலும்புகளும் இங்ஙனங் கீறுவதால் இயல் பாகவே இடையூறின்றிப் பிரிகின்றன. விலங்குகளுடைய முன்னங்கால்களை இவ்வாறு பகுத்திடமுடியாது. மக்களின் கைகளோ இயற்கையிலேயே இருபிரிவாக வகுக்கப்பட்டிருக் கின்றன. இவ் இருபிரிவுகளும் சதையினால் சேர்க்கப்பட்டிருக் கின்றனவேயன்றி எலும்பினாலன்று. யாதாயினும் ஒரு காரணத்தால் பெருவிரலுக்கும் ஆட்காட்டிவிரலுக்கும் நடுவே செல்கின்ற இடை விரிந்திடுமாயின் யாது நேரிடும்? நான்கு கைகளுண்டாகும். புனையுமாற்றல் கொண்டு இதைப் பார்க்கு மாறு வேண்டுகின்றேன். கருநிலையிலே மரமாயினும் புழுவாயி னும் மீனாயினும் விலங்காயினும் யாவும் ஒருருவமுடையன வென்பதை நன்கறிந்த தமிழர்கள், மக்கட்பிறவிக்கு உயர்ந்த நிலையில் முழங்கையிலிருந்து பிரிகின்ற நான்கு கைகளை யுடை யதாய் உயிர் விளங்கவேண்டுமென்று நினைத்தார்களென நாம் கருதலாம். புனையுமாற்றல் கொண்டு வகுத்த இவ்வடிவம் அறிவுக்கு முரண்பட்டதன்று என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். தமிழர்கள் தங்கள் கடவுளர்க்கு நான்கு கைகளை வகுத்து மக்கட்பிறவிக்கு மேம்பட்ட நிலை அதுவே என நினைத்தனர். அவர்கள் கைகளின் தொகையை அதிகப் படுத்தினார்களேயன்றிக் கால்களைப் பெருக்கவில்லை. எதிர் பாராத ஒரு நிகழ்ச்சியால் ஆட்காட்டிவிரலுக்கும் பெருவிர லுக்குமிடையே ஒரு பிளவுண்டாமாயின், அதைத் தடுப்ப தற்கு எலும்பொன்றுமில்லை என்பதைக் கருத்தில் வைக்க வேண்டும்.

ஆதலின், நான்கு கைகள் வளர்வது முடியாத ஒரு நிகழ்ச்சியாகாது. பண்டைத் தமிழர்கள் நான்கு கைகளோடு கடவுளரை வகுத்த புனையு மாற்றலை நாம் புகழவேண்டும். இவ்வாற்றல் கொண்டே எட்டு, பதினாறு கைகளையுடைய உருவங்களை அவர்கள் வகுத்தனர். இதை மற்றுந் தொடர்ந்து கடவுளர்க்குத் தலைகளையும் பெருக்கிக் காட்டியிருக்கின்றார் கள். வடிவும் அறிவும் ஒன்றையொன்று தழுவி வளர்ச்சி பெற்ற வகையை எடுத்துக் காட்டியிருக்கின்றேன். இதில், பார்வை என்று நாம் சொல்லும் அறிவு, கணக்கியலின் முறைக்கிசைய, கீழிருந்து மேல் நிமிர 180-திக்கிரியாகும். இதில் மக்களுடைய கண்கள் 90 திக்கிரியே அடைந்திருக்

கின்றன. மக்கட் பிறவிக்கு மேற்பட்ட நிலையில் அக்கண்கள் 180-டிக்கிரி நிமிரவேண்டுமென்பது கணக்கியலாற் பெறப்படும் உண்மையாகும். இந்நிலையில், அவைகள் விசும்பை நேர்மேலே காணுமாறு அமையப் பெறல்வேண்டும். இவ்வகையிலுந் தமிழர்கள் தங்கள் புனையுமாற்றலைப் புகுத்திச் சிவனுடைய ஊர்த்துவமுகத்தை நேரே விசும்பை நோக்குமாறு அமைத்திருக்கின்றனர். இதைப் புனையுமாற்றல் என்று நாம் கூறிடினும் அறிவினின்றும் அஃது அகன்றதன்று.

(தொடரும்)

பொருள்களின் ஆக்கப்பாடு

[திரு. T. V. அருணசலம் பிள்ளையவர்கள், B.A., (Hons.]

உலகத்தின்கணுள்ள பருப்பொருள்களை 1 பகுபொருள்கள், 2 பகாப் பொருள்கள் என விருபாலாகப் பிரித்தலாகும். இங்ஙனம் கூறுபடுத்துவது 3 இயைபுநூன்முறைப்படியாம். பிறநூலோர் வேறு வகையாகவும் கூறுவர். நாம் காணும் பொருள்கள் எண்ணிறந்தன. ஆனல் இவற்றிற் பெரும்பாலன 4 பகுக்கப்படும் தன்மையுடையனவா யிருக்கின்றன. அவற்றைப் பகுத்துப் பார்க்கும்பொழுது சுமார் தொண்ணூறு மூலப்பொருள்கள் அல்லது பகாப் பொருள்கள் கிடைக்கின்றன. இப்பகாப் பொருள்களின் பல் திறப்பட்ட 5 இயைபினாலே தான் பன்னூறுயிரம் பகுபொருள்கள் உண்டாகின்றன. பகாப் பொருள்களின் பெயர்களடங்கிய ஒரு அட்டவணையைப் பார்த்தால் அப்பெயர்களிற் பாதி பலருக்குத் தெரியாததாயிருக்கும். அந்தப் பொருள்களில் ஒரு சிலவே நாம் நன்கறிந்தவை. ஒரு சில நாம் ஒருவாறறிந்தவை. நூலோர் பகாப் பொருள்களின் சிறப்பியல்புகளைச் செவ்வனம் ஆராய்ந்துள்ளார்கள்.

பகாப் பொருள்கள் ஒன்றேடொன்றே, பலவோ இயைந்து பகுபொருள்கள் உண்டாகும்பொழுது நாம் சிறப்பாய் நினைவிற்கொள்ள வேண்டியதொன்றுண்டு. அஃதென்னையெனின், பகாப் பொருள்களின் குணங்கள் தெரிந்த மாத்திரையானே அவற்றினின்று உண்டாகும் பகுபொருள்களின் இயல்பை நாம் சொல்லிவிட முடியாதென்பது.

---

1. Compounds 2. Elements 3. Chemistry
4. Chemically decomposable 5. Chemical combination

காட்டாக 1 நீரியம், 2 உயிரியம் என்னும் இரண்டு பகாப் பொருள்களை எடுத்துக்கொள்வோம். இவை 3 வளிகளாகலின் இவற்றின் இயைபினால் பிறிதொருவளியே உண்டாகலாம் என்று நாம் நினைப்பது இயற்கை. ஆயின் உண்மையதுவன்று. இவ்விருவளிகளையும் சேர்த்து ஒருகாலத்தில் வைத்திருந்தால் அவை 4 வெறுங்கலவையாகவே இருப்பன. அங்ஙனம் வைத்திருப்பது மணலையும் சர்க்கரையும் சேர்த்து வைத்திருப்பதுபோலாம். ஒவ்வொருவளியும் தன் தன் தனிக்குணத்தோடிருக்குமேயன்றி அக்குணம் சிறிதேனும் மாறுபடாது.

இனி, இந்த வளிகளை 5 மின்னொழுக்கினால் இயைத்துவிடலாம். அங்ஙனம் இயைக்கும்பொழுது இரண்டு வளிகளினின்றும் முற்றிலும் மாறுபடுந் தோற்றமுடைய தண்ணீர் உண்டாகின்றது. இதற்கு எதிரிடையாகத் தண்ணீரினுள் மின்னொழுக்கைச் செலுத்தினால் தண்ணீர் நீரியமாகவும் உயிரியமாகவும் பிரிகின்றது. நீரியம் மிக விரைவில் தீப்பற்றக் கூடியது. தண்ணீரோ நெருப்பிற்குப் பகை. உயிரியம் கிட்டத் தட்ட மற்றெல்லாப் பொருள்களையும் எரித்துவிடும் ஆற்றல் வாய்ந்தது. இரும்புக் கம்பிகளைக்கூட எரியச் செய்யும். ஆனால் அது நீர்வளியுடன் இயைபு கொண்டு தண்ணீராய் மாறும் பொழுது தனக்கியல்பாயிருந்த எரிக்கும் ஆற்றலை இழந்து விடுகிறது. எனவே உயிரியமும் நீரியமும் இயையுமிடத்து அவற்றின் தனிக்குணங்கள் முற்றிலும் போய்விட வேறு பண்புகளுடைய தண்ணீருண்டாகின்றது.

இங்ஙனம் தண்ணீருண்டாகுங்கால் நிகழ்வது யாதென்றறிய நாம் விழைவது இயற்கை. இன்னது நடக்கின்றதென்பது நேராகப் புலனாகாது. ஆயின் ஆண்டு நடப்பதை நம் மனக்கண்ணாற் காணுதல் கூடும். எல்லாப் பொருள்களும் சிறு சிறு 6 பரமாணுக்களால் ஆகியவை. இப்பரமாணுக்கள் மிகுந்த 7 பார்வைப் பெருக்கமுடைய 8 உருப்பெருக்கிகளாலும் கண்டறிய முடியாத அத்துணைச் சிறியன. அவற்றின் குறுக்களவு ஒரு அங்குலத்தின் 9 ஐந்துகோடியில் ஒரு பங்கு என்று கணித்திருக்கிறார்கள். இந்த அளவை நம்மனத்தால் நினைக்கக்கூட இயலாது. அஃது மற்ற நுண்பொருள்களோடு அதனை ஒப்பிட்டுக் காண உதவுமேயன்றி வேறொரு பயனையும் தாராது.

---

1. Hydrogen 2. Oxygen 3. Gases. 4. Mixture
5. Electricity 6. Atoms 7. Magnification
8. Microscopes 9. $\frac{1}{50,000,000}$ inch.

[1] அறிவியற்றுறையில் புதிதாய்ப் பயிற்சி செய்யத் தொடங்கியிருக்கும் ஒருவன் உருப் பெருக்கியில் ஒரு பொருளைக் காணும் பொழுது, அப்பொருள் வெறுங் கண்ணுக்கு எப்படித் தோன்றுகின்றதென்பதையும் விருப்புடனறிவான். ஒரு துகளின் அளவாய்க் கண்ணுக்குப் புலனுவது உருப்பெருக்கியில் ஓர் அழகிய சிப்பியின் வடிவம்போல அவனுக்குத் தெரிகிறது. இன்னும் அவன் மிக்கவாற்றலுடையதோர் உருப்பெருக்கியில் ஒரு [2] நுண்கூட்டை நோக்கும் பொழுது, தான் பார்த்துக்கொண்டிருக்கும் பொருள் வெறுங் கண்ணுக்குச் சற்றேனும் தெரியாததென் றுணர்கின்றான். அஃது ஒரு துகளினுஞ்சிறிது. நுண்ணியபொருளுக்கோர் முடிவெல்லையாக இந்நுண் கூட்டினைக் கருதலாகும். ஏனென்றால் அது நம் கண்ணுக்குப் புலனுவதில்லை. ஆனால் பகாப் பொருள்களின் [3] பரமாணுக்களோடு இந்நுண் கூடுகளை ஒப்பிட்டுப் பார்ப்பது மக்களையும் அரக்கர்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது போலாம். நுண்கூடு ஒவ்வொன்றிலும் பன்னூறு கோடிப் பரமாணுக்கள் இருக்கின்றன. இயற்கைக் கொற்றன் எடுத்தடுக்கும் செங்கல்கள் எனத் தகும் இச்சிறு பரமாணுக்களின் அளவை மனத்தாற் கருதுவதும் இயலாதாகும். எல்லாப் பகாப் பொருள்களும் பரமாணுக்கள் என்னும் மிகமிகச் சிறிய பகுதிகளாலாகியவை என்று கருதுவது சாலும்.

பகாப் பொருள்கள் எத்தனையோ அத்தனை வேறுபட்ட பரமாணுக்களும் உண்டு. [4] இரும்புப் பரமாணு, தங்கப் பரமாணு, நீரியப் பரமாணு, உயிரியப் பரமாணு, கரியப் பரமாணு என்றிங்ஙனமாக ஏறக்குறைய தொண்ணூறு வகையான வெவ்வேறு பரமாணுக்கள் இருக்கின்றன. தண்ணீர்ப் பரமாணு என்று நாம் சுட்டுவதில்லை. ஏனென்றால் தண்ணீர் தனித்தியலும் பான்மையுள்ளது. தண்ணீரின் மிகமிகச் சிறிய பாகமானது இரண்டு நீரியப் பரமாணுக்களும் ஓர் உயிரியப் பரமாணுவும் இயைந்து உண்டாயிருக்கின்றது. இந்தச் சிறு இயைபுக்கு அணு என்றுபெயர். நோக்குமிடத்து அதுவே, தானாய்த் தனித்திருக்கக்கூடிய தண்ணீரின் மிகமிகச் சிறுபகுதியாகும். ஏனென்றால் அதை இயைபு முறையில் இன்னுஞ்சிறியதாக்க முயன்றால், அது தண்ணீராக இராமல் நீரியவளியும் உயிரியவளியுமாய்ப் பிரிந்துவிடும்.

ஓர் அணு பல பரமாணுக்களின் தொகுதியேயாம். ஓர் அணுவின்கணுள்ள பரமாணுக்கள் ஒரே திறத்தனவாகவோ

---

1. In the field of scienee 2. A bacillus 3. Atom
4. Atoms of Iron, Gold, Hydrogen, Oxygen, Carbon etc.,

அல்லது பலதிறத்தனவாகவோ இருக்கலாம். ஒரு நீரிய வளி அணுவில் ஒரே இனமான இரண்டு நீரியவளிப் பரமாணுக்கள் இருக்கின்றன. சில இயைபுப் பொருள்களின் அணுக்கள் பல்வேறு வகைப்பட்ட பரமாணுக்களாகியவை. எடுத்துக்காட்டாக, சீனக்காரம் எனப்படும் இயைபுப் பொருளின் ஒரு தனி அணுவில் கிட்டத்தட்ட ஒருநூறு பரமாணுக்கள் இருக்கின்றன. இன்னும் வேறுசில இயைபுப் பொருள்களின் தனி அணுக்களில் பல்லாயிரக்கணக்கான பரமாணுக்கள் உள்ளன.

பகாப் பொருள்களின் பரமாணுக்கள் இயைந்து அணுக்கள் உண்டாகின்றனவென்று நாம் இப்பொழுது அறிந்தோம். பரமாணுக்கள் ஒன்றையொன்று தழுவிக் கட்டிக் கொள்கின்றன. அவற்றின் [1] தழுவுவலி பல படியாக இருக்கும். சில பரமாணுக்கள் ஒன்றுக்கொன்று சரியாய் மருவுவன. வேறு சில பரமாணுக்கள் இரண்டு பரமாணுக்களோடு இயையும் ஆற்றல் வாய்ந்தன. இன்னும் சில மூன்றுடனும், ஒருசில நான்குடனும், இன்னும் பலவாறாகவும் இயைபு கொள்வன. எடுத்துக்காட்டாக [2] உப்பியத்தின் பரமாணுவொன்று ஓர் [3] பச்சியப் பரமாணுவோடும், ஓர் உயிரிய வளிப்பரமாணு இரண்டு நீரியப்பரமாணுக்களோடும், ஓர் தங்கப்பரமாணு மூன்று பச்சியப் பரமாணுக்களோடும் இயைகின்றன. [4] கரியப்பரமாணு நான்கு நீரியப்பரமாணுக்களைப் பிணிக்கும் வல்லமையுடையது. இன்னும் வேறு சிலவற்றிற்கு இதிலும் மிக்க வல்லமை யுண்டு. மேலும், [5] வெடியம், கரியம் முதலிய சில பரமாணுக்களுக்குச் சமயத்துக் கேற்றவாறு பிணிக்கும் வலிமை வேற்றுமைப் படுகின்றது. ஒரு வெடியப்பரமாணு சில வேளைகளில் ஒரு பரமாணுவையும், சில வேளை மூன்றையும், சில வேளை ஐந்தையும் வௌவும். எங்ஙனமாயினும் நாம் இங்குக் கருதவேண்டியது பலதிறத்தனவாய பகாப்பொருள்களின் பரமாணுக்கள் பன்னூறு வழிகளில் ஒன்றுடன் ஒன்றும் பலவும் சேர்வதினால் எல்லாப் பகுபொருள்களினுடையவும் அணுக்கள் உண்டாகின்றன என்பதேயாம்.

பரமாணுக்கள் ஒன்றோடொன்றியைவது [6] இயைபுக் கவர்ச்சி யென்னும் வலியின் பயனாம். இவ்வற்புதமான ஆற்றலைப்பற்றி வெகுகாலமாக ஒன்றுந் தெரியாமலிருந்தது.

---

1. Valency 2. Sodium 3. Chlorine 4. Carbon 5. Nitrogen 6. Chemical affinity.

சென்ற சில வாண்டுகளுக் குள்ளேதான் இக்கவர்ச்சி வேறுபட்ட பரமாணுக்களினிடையே யுள்ள மின்கவர்ச்சி யென்று தெரிந்திருக்கிறது. மின்மயம் ஊட்டப்பெற்ற ஒரு கம்பி, கிடைச்சுப் பந்துகளையும் இறகுகளையும் தன்னிடத்தே இழுத்துக் கொள்கின்றது. ஒரு கண்ணாடிக் கம்பியை எடுத்து அதை அறவே ஈரம் போக்கி, ஒரு பட்டுக்குட்டையில் விரைவாய்த் தேய்த்தால், அது நுண்ணிய தூவிகளைத் தன்னிடமாய் இழுத்துக் கொள்ளும் ஆற்றலைப்பெறும்.

ஆனால் மின்மயமுடைய பொருள்கள் எல்லாம் ஒன்றையொன்று ஈர்த்துக் கொள்ளமாட்டா. மின்மயங் குறித்து ஆராய்ச்சிகள் துவக்கப்பட்ட காலத்திலேயே கண்ணாடியும் பட்டும் உராய்ந்துண்டாகிற மின்மயம் ஒரு வகை முத்திரை மெழுகும் பட்டும் தேய்க்கப்பட்டுண்டாகிற மின்மயத்தினும் வேறுவகை என்று கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. மேற்கூறியபடி, உரைக்கப்பட்ட கண்ணாடிக் கம்பியினால், கனம் குறைந்த ஒருபொருளில் மின்மயம் ஊட்டி, அதுபோல வேறொரு இலேசான பொருளில் மேற்சொன்னபடி தேய்க்கப்பட்ட முத்திரை மெழுகுக்கோலால் மின்மயம் ஊட்டி, இரண்டையும் சிறிது அண்மையில் வைத்த விடத்து ஒன்றையொன்று ஈர்த்தன. ஆனால் இரண்டு இலேசான பொருள்களுக்கும் ஒரேவிதமான மின்மயம் கொடுத்தால் அப்பொருள்கள் ஒன்றை யொன்று அகற்றின. கண்ணாடியினால் மின்மயம் கொடுக்கப்பெற்ற இரண்டு இலேசான கிடைச்சுப் பந்துகள் ஒன்றிலிருந்து ஒன்று விலகிச் சென்றன. அதுபோல இரண்டு பந்துகளுக்கும் முத்திரை மெழுகினால் மின்மயத்தைக் கொடுத்தபொழுதும் அவை ஒன்றை ஒன்று விலக்கின. ஆகையால் ஒரேமாதிரியான மின்மயமுடைய இருபொருள்கள் ஒன்றை யொன்று விலக்கின என்று நன்கு விளங்கிற்று. மேலும் கண்ணாடியிலிருந்து உண்டாகும் மின்மயம் முத்திரை மெழுகிலிருந்துண்டாகும் மின்மயத்தின் வேறுபட்டதென்பதும்தெரிந்தது. ஏனென்றால் கண்ணாடியால் "ஊட்டப்பெற்ற" ஒரு பொருள் முத்திரை மெழுகினால் "ஊட்டப்பெற்ற" ஒரு பொருளை விலக்காது தன்னிடத்து ஈர்த்துக் கொண்டமையின்.

(தொடரும்)



சிவஞானபோதக் கருத்து

[திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B. A.]

[௧00 ஆம் பக்கத்தொடர்ச்சி]

(பதிப்புரிமை ஆக்கியோர்க்குரியது)

நான்காவது சூத்திரம் இரண்டாவது அதிகரணம்

26. கருவிகளோடு கூடாதிருந்த கேவல நிலையில் ஒன்றும் அறியாதிருந்த ஆன்மா, கருவிகளோடுகூடிய சகல நிலையில் ஏகதேசத்தில் அறியும் என்று கூடிய ஆசிரியர் உரையைக் கேட்ட அந்தக்கரணான்மவாதி முதலியோர் ஓர் தடை உரை கூறுகின்றார். அத்தடை உரையானது ஆணவ மலத்தினால் ஆன்மாவுக்கு முன்பு இல்லாததாகிய அறிவு பின் கருவிகளோடு கூடியபொழுது தோன்றும் என்றால் இல்லது தோன்றாது என்னும் சற்காரிய வாதத்தோடு முரணும் என்பது.

27. இத்தடை உரையைக் கேட்ட ஆசிரியர் தாம்கூறிய மேற்கோளை வலியுறுத்தற்குரிய ஏதுவைக் கூறுகின்றார். "அது தான் ஞானதிரோதமாய் மறைத்துக் கொடுநிற்றலான்" என்பது ஏது—அது என்ற சுட்டுப் பெயர் சகசமலமாகிய ஆணவ மலத்தைக் குறிக்கிறது. ஞானதிரோதகம் என்ற வடமொழிச் சொற்றொடர் அறிவை மறைப்பது என்று பொருள்படும். திரோதகம் என்ற வடமொழிச்சொல்லை 'ஆசிரியரே மறைத்துக் கொடுநிற்றலான்' என்று பின் தமிழ்மொழியிலும் விளக்கிக் கூறுகின்றார். சகசமலமாகிய ஆணவமலம் ஆன்மாவின் அறிவை மறைத்துக் கொண்டிருத்தலால் கேவலநிலையில் ஆன்மா அறியாதிருந்தது என்பது ஏதுவின் தொகைப் பொருள். வேட்கையும் (இச்சையும்) செயலும் ஞானத்தின் விசேடங்களேயன்றி வேறின்மையின் இங்கே ஆசிரியர் ஞானதிரோதகம் என்று கூறியது ஞானம் இச்சை செயல்கள் மூன்றையு மறைப்பதைக் குறிக்கும் என அறிக.

28. ஆசிரியர் கூறிய ஏது எவ்வாறு எதிர்வாதிகள் கூறின தடை உரைக்கு அமைதி (சமாதானம்) ஆகும் எனில் கூறு

தும்—ஆணவமலம் ஆன்மாவின் அறிவை மறைத்துக் கொண்ருந்தது என்றதனால் ஆணவமலம் ஆன்மாவின் அறிவை இலதாம்படி கெடுக்கவில்லை என்பது போதரும். படலத்தால் (cataract) மூடப்பட்டிருந்த கண்ணின் ஒளியானது அப்படலம் மருத்துவனால் நீக்கப்பட்டபொழுது புறப்பொருள்களைப் பார்க்குந்திறனுடையதாகின்றது. அதுபோல ஆன்மாவின் அறிவு கேவல நிலையில் ஆணவமலத்தால் மறைக்கப்பட்டிருந்தபொழுது சிறிதுங் கெடாமலிருந்ததால் சகல நிலையில் கருவிகளின் துணையினால் ஏகதேச விளக்க முடையதாகின்றது. இதனால் கேவல நிலையில் ஆன்மாவுக்கு விளங்காதிருந்த அறிவு சகலநிலையில் கருவிகளின் துணையால் ஏகதேசத்தில் விளங்கினதே அன்றி முன்பில்லாதிருந்த அறிவு பின்பு சகல நிலையில் தோன்றவில்லை என்பது நன்கு புலனும். முன்பு இல்லாதிருந்த அறிவு பின்பு தோன்றியது என்பது இல்லது தோன்றாது என்னும் சற்காரிய வாதத்துக்கு முரணுகுமே அன்றி முன்பு இருந்து விளங்காதிருந்த அறிவு பின்பு விளங்கியது என்பது சற்காரியவாதத்துக்கு முரணுகாமை அறிக.

29. ஆசியர் கூறிய ஏதுவினால் சற்காரிய வாதம்பற்றி நிகழும்தடை உரைக்கு அமைதி கூறப்பட்டதுமன்றி ஒளியின்மையே இருளன்றி இருள் என்னும் ஒரு பொருளில்லை, அதுபோல அறிவு இன்மை (ஞானமின்மை)யே அறியாமை (அஞ்ஞானம்) அன்றி அறியாமை என்பதோர் பொருளில்லை என்றும் அவ்வறியாமைக்குக் காரணமாகக் கூறப்படுகிற ஆணவமலமுமில்லை என்றும் கூறுகிற ஏகான்மவாதி முதலியோர் கொள்கையும் மறுக்கப்பட்டது.

30. ஏகான்மவாதி முதலியோர் கொள்கை எவ்வாறு மறுக்கப்பட்டது என்பதுபற்றிக் கூறுவாம். ஆணவமலமானது ஆன்மாவின் அறிவை மறைத்தல் என்ற தொழிலைச் செய்கிறது என்று ஆசிரியர் தாம் கூறிய ஏதுவிற் கூறினர். அத்தொழிலின் பயனுக ஆன்மா, மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்னும் ஏழு குணங்களையும் அடைந்து அவற்றைக் கடக்கமாட்டாது அல்லற்படுகின்றது. அவற்றுள் பெரியோராலும் நூலினாலும் தீயன என்றறிந்தவற்றினின்று நீங்காது அவற்றைச் செய்து நிற்கும் ஆன்மாவினது மயக்க அறிவாகிய மோகம் ஏனைய ஆறு குணங்களுக்கும் காரணமாயுள்ளது. உலகிலுள்ள மக்கள் பலதர மயக்க அறிவையுடையவர்களாய்ப் பலதரத் தீயசெயல்களைச் செய்து அவற்றால் தங்களுக்கும் பிற உயிர்களுக்கும் பலதரத்

துன்பங்களை யுண்டுபண்ணி வருதலை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். ஆணவமலம் என்பதோர் பொருளில்லை யானால் இத்தனை கேடுகளுக்குங் காரணமான தீயசெயல்கள் மக்களிடத்தில் உண்டாவதற்குக் காரணம் என்னை? மயக்க அறிவு ஆகிய அறியாமையானது இல்லாத பொருளா யிருந்தால் இல்லாத பொருள் ஒரு தொழிலைச்செய்து இவ்வளவு கேட்டிற்கும் எவ்வாறு காரணமாயிருக்கும்? அபாவம் (இன்மை) அளவை நாற்படி முன்னபாவம், என்றுமபாவம், ஒன்றினென் றபாவம், அழிவுபாட் டபாவம் என நான்கு வகைப்படும். அவற்றுள் முன்னபாவ மொழிந்த ஏனைய மூன்று அபாவங்களிலொன்றென எதிர் வாதிகள் கூறும் ஞான பாவத்தை (அறிவின்மையை) நாம் கொண்டால் அவை மூன்று மொருகாலும் அழிவதன் றாகலின் மெய்ஞ்ஞானத்தினுல்மாத்திர மடையத்தக்க வீடு பேறு என்பதே இல்லையாக முடியும். வீடு பேறு இல்லை என்பது வேதாகமங்களின் கருத்துக்கு முரணாகும். அங்ஙனம் முரணாகாமைப் பொருட்டு எதிர்வாதிகள் கூறும் ஞான பாவமாவது ஞானத்தின் முன்னபாவம் என நாம் கொள்ளல் வேண்டும்; கொள்ளவே நித்தமாகிய ஞானம் முன்னில்லா தொழிதற்கு ஒரு காரணமுண் டென்பது பெறப்படும். அக் காரணமே ஆணவமலம் என அறிக.

31. மேலே கூறப்பட்ட ஏகதேச விளக்கம் என்பது ஒரு புடை விளங்குதல் (partial illumination) ஆகும். தூவெளி (ஞானகாசம்)யில் விளங்குகிற அருளொளி முழுவிளக்க மாகும். இந்த அருளொளிக்குக் கோடி ஞாயிறுகளின் ஒளித்தொகுதியுமொப்பாகாது என்று ஆன்றோர் கூறுவர். அருளொளி முதற்கண் சுத்தமாயையிலுள்ள சிவம் சத்தி தத்துவங்களாகிய நாதவிந்துக்களில் விளங்கி அவ்வாறு நாத விந்துக்களில் விளங்குகிற ஒளியானது ஏனைய மாயா தத்துவக் கருவிகளில் கீழே மண் தத்துவம்வரை விளங்கு கின்றது. பிரகிருதிமாயையின் அடியிலுள்ள மண் தத்து வத்தை விளக்கும் சுத்த மாயா ஒளி நிவிர்த்திகலை ஒளி என்றும், நீர்முதல் மூலப்பகுதி வரையுள்ள ஏனைய இருபத்து மூன்று பிரகிருதி மாயா தத்துவங்களையும் விளக்கும் சுத்த மாயா ஒளி பிரதிட்டாகலை ஒளி என்றும், அசுத்த மாயா தத்துவங்கள் ஏழையும் விளக்கும் சுத்தமாயா ஒளி வித்தியா கலை ஒளி என்றும், சுத்தமாயையிலுள்ள சுத்தவித்தை ஈசுரம் சாதாக்கியம் ஆகிய மூன்று தத்துவங்களையும் விளக்கும் நாத விந்துக்களின் ஒளி சாந்தியாகலை ஒளி என்றும், நாதவிந்துக்

களின் ஒளி சாந்தியாதீதகலை ஒளி என்றும் கூறப்படும். சாந்தியாதீதகலை ஒளி ஏனைய நான்கு கலை ஒளிகளைப் பார்க்கிலும் மிக்கு விளங்குவதாயும் அதற்குக் கீழேயுள்ள சாந்திகலைக்கு ஒளி செய்வதாயுமுள்ளது அவ்வாறே ஏனைய கலை ஒளிகளில் ஒவ்வொன்றும் அதற்குக் கீழேயுள்ள கலை ஒளியைப் பார்க்கிலும் மிக்கு விளங்குவதாயும் அக்கலைக்கு ஒளி செய்வதாயுமுள்ளது. அடியிலுள்ள நிவர்த்தி கலை ஒளி, ஏனைய நான்குகலை ஒளிகளைப் பார்க்கிலும் சுருங்கிய விளக்கமுடையது. கிரியா சத்திபேதமாகிய இந்த அஞ்சுகலை ஒளிகளும் நாததத்துவத்துக்கு அப்பால் விளங்கும் பேரொளியை நோக்க ஏகதேச விளக்கமுடையனவா யிருத்தலால் அவைகளால் விளக்கப்படுகிற மாயா தத்துவக் கருவிகளில் விளங்கும் ஒளி ஏகதேச விளக்கமுடையது என்று கூறப்பட்டது. அவ்வஞ்சுகலை ஒளிகளும் தம்முள் ஒன்றுக்கொன்று ஏகதேச விளக்கமுடையதாயு மிருக்கின்றன. அவ்வாறு மாயாதத்துவக் கருவிகளில் விளங்கும் ஒளிகளின் ஏற்றத் தாழ்வுகள் அம்மாயா தத்துவக் கருவிகளின் நுண்மை பருமை வேறுபாடுகளாலும் அம்மாயா தத்துவக் கருவிகளை விளக்கும் ஒளிகளை உடைய அஞ்சு சுத்த மாயா கலைகளின் விருத்தி வேறுபாடுகளாலு முண்டாகின்றன. இவ்வொளிகளின் ஏற்றத் தாழ்வுகள் ஆணவமலத்தால் மறைக்கப்பட்டிருக்கிற ஆன்மாவினுடைய அறிவு வேட்கை செயல்கள் படி முறையில் விளங்கி வளர்ந்து திருத்தமடைதற்கு ஏற்றதாயுள்ளன.

32 நிவிர்த்திகலை ஒளி மண்தத்துவத்தைச் சீவிக்கச் செய்கின்றது; அதாவது அவ்வொளியின்றி மண்தத்துவமானது அசையமாட்டாத மாயா பூதமாயிருக்கும் (dead matter without the power of Vibration). அவ்வாறே ஏனைய நான்குகலை ஒளிகளும் மேலே கூறப்பட்டவாறு அவற்றிற்குச் சேர்ந்த மாயா தத்துவக் கருவிகளைச் சீவிக்கச் செய்கின்றன. இந்த அஞ்சுகலை ஒளிகளும் விளக்குகின்ற மாயா தத்துவக் கருவிகளால் ஆன்மாவின் உடல்களும் (பருஉடல் நுண்ணுடல் முதலியன) அவ்வுடல்களுடன் ஆன்மா இயங்கும் உலகங்களும் (பரு உலகம் நுண்ணுலக முதலியன) ஒன்றுக்கொன்று பொருந்தி யிணங்கும்படி அமைக்கப்பட்டுள்ளன. அதனால் உடல் ஒரு சிறிய உலகம் (microcosm) என்று கூறப்படுகிறது. அவ்வாறு உடல்களும் உலகங்களும் ஒரு தன்மையனவாய் இணங்கிப் பொருந்தியிருத்தலினாலே தான் உடல்களிலிருந்துகொண்டு

அவற்றை இயக்கும் ஆன்மா உலகவிடயங்கள் பற்றித் தன் வேட்கை அறிவு செயல்களை நிகழ்த்தி இன்ப துன்ப நுகர்வுகளை அடைகின்றது.

33. மேலே கூறியவாற்றால் மாயையினுலாகிய மாயா தத்துவக் கருவிகள் இறைவனது அருளொளி விரவப்பெற்று அவற்றோடு சேர்ந்திருக்கிற ஆன்மாவுக்குச் சகல நிலையில் இரவில் விளக்கு ஒளிபோல அறிவு வேட்கை செயல்களை ஏக தேசத்தில் விளங்கச் செய்கின்றன என்பது தெளிவு. மாயையில் ஆணவமலமும் வியாபித்திருத்தலால் மாயை ஆன்மாவுக்கு மயக்கத்தையுஞ் செய்கின்றதே அன்றித் தானுகத் தனித்து மயக்கத்தைச் செய்வதில்லை. ஆகவே கண்ணுக்கு விளக்கொளிபோலக் காட்டாக நின்று விடயங்களை அறியும் வண்ணம் ஆன்மாவுக்கு அறிவு வேட்கை செயல்களை விளக்குதல் மாயையின் செய்தி; அவ்வறிவு வேட்கை செயல்களைத் தடை செய்து நிற்றல் ஆணவமலத்தின் செய்தி. இங்ஙனம் மாயை ஆணவமலம் இரண்டும் மாயா உடல்களிலிருக்கும் ஆன்மாவினிடத்தில் இகலி நடத்தலினுலேதான் ஆன்மாவுக்கு உலக வாழ்வில் நாம் காணுகிறபடி நன்மை தீமைப் போராட்டம் (Struggle in life between good and evil) உண்டாகின்றது. இதனுல் ஆன்மாவின் அறியாமைக்கு மாயையே காரணம், ஆணவமலம் என்பதோர் பொருள் வேண்டப்படுவதில்லை என்று கூறும் ஐக்கவாத சைவர் முதலியோர் கொள்கை மறுக்கப்பட்டது.

169

செய்திகளும் குறிப்புகளும்
News and Notes

உலகின்புறக் கண்டு தாமின்புறுதலே உயர் பண்பென்பதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்பவர் மதுரைப் பெருவள்ளல் திரு. எம். திரவியம்பிள்ளையாவர். (முகப்புப் படம் பார்க்க) உதவிபெறத் தகுதியுடைய ஏழை எளியோர் நலங் கருதி அப்பெரியார் இயற்றிவரும் அறச்செயல்கள் அளவிறந்தனவாம். கருவுற்றிருக்கும் ஏழைப் பெண்கள் கருவுயிர்ப்புக் காலத்தில் பொருள் முட்டுப்பாட்டினாலும், எடுப்பாரும் பிடிப்பாருமில்லாமலும் படும் அல்லல்களைக் கண்ணுற்ற இச்சீரியர் ஒரே காலத்தில் பதினாறு பேர் நலமே கருவுயிர்த்து உடல் நலமுடன் வீடுதிரும்புதற்கான கருவுயிர்ப்பு விடுதி ஏற்பாட்டைச் செய்து கண்காணித்து வருகிறார்கள். மதுரை நகரிலுள்ள போது நூல் நிலையத்திற்கு ஒரு பெருந்தொகை நன்கொடையளித்துள்ளார்கள். அண்மையில் திருநெல்வேலி இந்துக்கல்லூரி சீர்திருத்தமுற வகையின்றித் தவித்து நின்றதறிந்து ஒரு நூறாயிரம் வெண்பொற்காசை நன்கொடையாயளித்துத் தமிழ் நாட்டாரின் நன்றியறிதலைப் பெற்றுள்ளார்கள். தமிழ்நாடு செய்த தவப்பயனாய்ப் பிறந்துள்ள இத்திருமனகர் நீடுழிகாலம் வாழ்ந்து மேன்மேலும் நலம் பலபுரிந்து நற்புகழெய்துவார்களாக.

* * *

அறுப்பு முறையில் தலைசிறந்து விளங்கிப் பெரும்பொருளீட்டிப் புகழுடம்பெய்தி மண்ணுடம்பு நீத்தவர் டாக்டர் எஸ். அரங்காச்சாரியார் என்பார். (முகப்புப்படம் பார்க்க). அவர் சொத்தில் ஏறக்குறைய ஒரு நூறாயிரம் ரூபாக்களை அவர் ஞாபகச் சின்னமாகப் பின்வரும் வகையில் அறச்செயல்களுக்காகப் பகுத்து வைப்பதென அவர் நன்மனைவியார் கமலா அம்மையார் முடிவு செய்துள்ளார்கள். சென்னை மருத்துவர் கல்லூரியில் ஐந்து மாணவர்களுக்கு ஆண்டுதோறும் உதவிச் சம்பளமளித்து வருதற்கென விடுமுதற்றொகை ரூ. 50,000. கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் உயர்தரப் படிப்புப் படிக்கும் மாணவர்களில் நால்வர்க்கு ஆண்டுதோறும் உதவிச் சம்பளம் அளிப்பதற்கென விடுமுதற்றொகை ரூ. 25,000. மயிலை இராமகிருஷ்ண மடத்தில் பயிலும் ஏழைப் பார்ப்பன மாணவ னொருவனுக்கு உதவிச் சம்பள மளிப்பதற்கென விடுமுதற்றொகை ரூ. 4000. எம். பி., பி. எஸ். தேர்வில் அறுப்பு

முறையிலும் மருத்து நூலிலும் முதன்மையாகத் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு மாணவனுக்குப் பொற்பதக்கம் ஆண்டுதோறும் அளிப்பதற்கென விடுமுதற்றொகை ரூ. 2,200. நுங்கம்பாக்கம் வித்யோதயா மகளிர் விடுதிக்கு ரூ 3,000. சோழங்கபுரம் சமஸ்கிருதக் கல்லூரி மாணவர் விடுதிக்கட்டட நிதிக்கு ரூ. 2,000. காஞ்சிபுரம் வேதபாடசாலைக்கு ரூ. 2,000. இந்து சமயத்திலும் தத்துவத்திலும் தேர்ச்சியுள்ள மாணவர்களுக்குப் பரிசளிப்பதற்கென கும்பகோணம் விசிஷ்டாத்வைத சபையாரிடம் விடப்பட்டுள்ள தொகை ரூ. 1,000. தமிழ் நாட்டுப் பெருமக்கள் ஒப்பரும் இப் பேரீகையைக் கண்ணுறுவார்களாக.

படத்திறப்பு விழா

சென்னைப் பல்கலைக்கழக மன்றத்தில் 18-10-35 மாலையில் பல்கலைக்கழகத் துணைத்தலைவர் திரு. R. லிட்டில் ஹெயில்ஸ் அவர்கள் தலைமையில் அண்ணுமலைப் பல்கலைக்கழகத் துணைத்தலைவர் திரு. V. S. சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் கச்சிக்கலம்பகம் இயற்றிய காலஞ் சென்ற பேராசிரியர் பூண்டி அரங்கநாத முதலியார் எம். ஏ., அவர்கள் உருவப்பட மொன்றைத் திறந்து வைத்தார்கள். இவர்கள் படம் செந்தமிழ்ச் செல்வி எட்டாவது சிலம்பில் வெளியிடப் பெற்றிருக்கிறது. இவர்களது அரிய வாழ்க்கை வரலாறு செல்வியின்கண் விரைந்து எழுதி வெளியிடப்பெறும்.

கோப்பனுப்பட்டிக் கலைமகள் கல்லூரி

திருவாளர் A. M. மெய்யப்பச் செட்டியாரவர்கள் மகளிர்க்கென கலைமகள் கல்லூரி ஒன்றைப் புதுக்கோட்டையைச் சேர்ந்த கொப்பனுப்பட்டியில் நிலைநிறுத்தி யிருக்கின்றார்கள். யாழ்ப்பாணம் இராமனுதன் காலேஜ், சென்னை வித்தியோதயா போன்ற மகளிர் கல்லூரிகளைப் பார்த்து அவற்றின் அமைப்பை ஒட்டி இதனை அமைத்திருப்பதாகத் தெரிகிறது. இவர்களின் நன்முயற்சி ஈடேறுவதற்குச் செட்டிமார்களெல்லாம் தங்கள் பெண்மக்களை இக்கல்லூரியிற் சேர்த்து இதற்கு வேண்டும் மற்ற உதவிகளைச் செய்தல் வேண்டும். இக்கல்லூரி வளர் பிறை போல் மேன்மேலும் வளர்ந்து எல்லா நலங்களும் பெற்று இனிது நடைபெறுகவென எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றோம்.

பாகனேரி, தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம்

இச் சங்கத்தின் முதலாவதாண்டு விழா பல்லாவரம் மறைத்திரு மறைமலை யடிகள் தலைமையில் பாகனேரியில் அறிஞர் பலர் சொற்பொழிவுகளுடன் நவம்பர் 9, 10-ஆம் நாட்களில் நடைபெறுமெனத் தெரிந்து மகிழ்கின்றோம்.

172



மதுரை வித்தியாபாநுப் பத்திராசிரியர்,
மு. ரா. கந்தசாமிக் கவிராயர்.